சேசுவின் இராச்சியம் வரும்படியாக மாதாவின் இராச்சியம் வருக!
- அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட்



"நீயாவது எனக்கு ஆறுதலளிக்க முயற்சி எடு."

ஜூலை & ஆகஸ்ட் - 2024
மலர் 45 இதழ் 7 & 8
வருடச் சந்தா ரூ. 150.00
தனிப்பிரதி ரூ.20.00

மாதா பரிகார மலர்



தேவமாதாவின் வாக்குறுதி

அன்புள்ள மாதா அப்போஸ்தலர்களே, வாசகர்களே,

இம்மாத மாதா பரிகார மலர் கார்மெல் உத்தரிய பக்தியின் விளக்கமாக வெளிவந்திருக்கிறது.

போர்ச்சுக்கலில், தேவமாதா 1917-ல், பாத்திமாவில் மூன்று சிறுவர்களுக்கு அளித்த இரண்டாம் காட்சியில், "பரிதாபத்திற்குரிய பாவிகள் செல்லும் நரகத்தை இப்போது கண்டீர்கள். இவர்களைக் காப்பாற்ற, என் மாசற்ற இருதயத்திற்குப் பரிகாரம் செய்யுங்கள்" என்றும், இதன் மூலம், "என் மாசற்ற இருதயம் வெற்றி பெறும், உலகிற்கு ஒரு சமாதான காலம் கொடுக்கப்படும்" என்றும் வாக்களித்தார்கள். வரப் போகும் காலங்களில் திருச்சபை தன் சத்தியத்திலிருந்து விலகி, நவீனத் தப்பறைக்குள் ஆன்மாக்களை இழுத்துச் செல்லும், அதனால் மிகப் பெரும் விசுவாச மறுதலிப்பு உண்டாகும் என்றும் தேவ அன்னை 1917-ஆம் ஆண்டிலேயே தன் பிள்ளைகளை எச்சரித்ததோடு, "**என்னால் மட்டுமே உங்களுக்கு உதவ முடியும்**" என்ற நம்பிக்கையையும் நமக்குத் தந்து, தன் வேண்டுகோள்களை ஏற்பவர்களுக்கு ஆன்ம பாதுகாப்பை உறுதி செய்தார்கள்.

சிங்கார வனத்தில் ஆதாமையும், ஏவாளையும் ஏமாற்றிய நரக வஞ்சகப் பாம்பை நோக்கிக் கடவுள், "**உனக்கும், ஸ்திரீக்கும்... பகையை உண்டாக்குவோம். அவள் உன் தலையை நசுக்குவாள், நீயோ அவளுடைய குதிகாலைத் தீண்ட முயலுவாய்**" என்று சபித்து, அந்த வார்த்தையையே பாவப்பட்ட மனுக்குலத்திற்கு இரட்சணிய நம்பிக்கையாகவும் தந்தருளினார். திருச்சபையில் பதிதம் பாம்பைப் போலத் தன் தலையை உயர்த்திய ஒவ்வொரு காலகட்டத்திலும், விசேஷமாய், நவீனவாதத் தப்பறை சத்திய விசுவாசத்தை ஒட்டுமொத்தமாக அழித்து, திருச்சபையை முழுமையாக அடிமைப்படுத்தி விடத் துடிக்கும் இந்த இறுதிக் காலத்திலும், அவற்றிலிருந்து ஆத்துமங்களைக் காப்பாற்றவும், சாதாரண கிறீஸ்தவ வாழ்வில் ஒவ்வொரு ஆத்தும சோதனைக்கு எதிராகவும், விசேஷமாய், **உலகம், பசாசு, சரீரம்** ஆகிய மூன்று எதிரிகளுக்கு எதிராகவும் அதே ஸ்திரீயாகிய மகா பரிசுத்த கன்னிமாமரியை நம் அனைவருக்கும் அவரே தாயாராகவும் தந்தருளினார். இதனால் இந்த நம் பரிசுத்த அன்னை சாத்தானின் சகல கண்ணிகளிலிருந்தும் ஆத்துமங்களைக் காப்பாற்றி, மோட்சம் சேர்ப்பார்கள் என்ற நம் நம்பிக்கை உறுதிப்படுகிறது.

பழைய ஏற்பாட்டில், நீண்ட நாட்களாக மழையின்றி அடைபட்டிருந்த வானத்தைத் திறந்து, கார்மெல் மலை மீது அபரிமிதமான மழையைப் பெய்வித்த கையளவு மேகத்தைப் போல் (3 அரசர் 18:44), பரலோகத்தின் சின்னக் கன்னிகை, அதே கார்மெல் மலை இராக்கினி, நமக்குத் தந்தருளியிருக்கிற இந்தச் சின்னஞ்சிறியதும், உலகின் கண்களுக்கு அற்பமானதாகத் தோன்றுவதுமான பரிசுத்த உத்தரியம், நரக நெருப்பையும் அணைக்கும் வல்லமை கொண்ட வரப்பிரசாதப் பெருமழையைப் பொழிந்து, அதை அணிந்திருப்பவர்கள் அந்த நரக நெருப்பில் விழாதபடி, இவ்வுலகில் அவர்களைப் பாதுகாத்து, பரலோகத்தை நோக்கி வழிநடத்துகிறது.

ஆகவே, மாதாவின் அன்புள்ள பிள்ளைகளே, தாமதியாது உங்கள் குடும்பங்கள் முழுவதையும் தேவ அன்னைக்கு அர்ப்பணித்து, கார்மெல் உத்தரிய சபையில் முறைப்படி சேர்ந்து, அந்த உத்தரியத்தை எப்போதும் அணிந்திருந்து, அதற்குரிய நிபந்தனைகளைத் தவறாமல் நிறைவேற்றி வருவதில் கருத்தாயிருங்கள். அப்போது இரட்சிக்கப்படுவீர்கள். தேவமாதாவின் இந்த உத்தரிய வாக்குறுதியைத் திருச்சபையும் பல சமயங்களில் அங்கீகரித்துள்ளது. இந்த வரப்பிரசாதக் கருவியின் வழியாக உங்களுக்கு வரப்பிரசாதங்களின் மத்தியஸ்தியால் தரப்படுகிற தேவ வரப்பிரசாதங்களோடு ஒத்துழைத்து, இவ்வளவு மகா பரிசுத்தமான தாய்க்கு ஓரளவாவது தகுதியுள்ள பிள்ளைகளாக, நல்ல கிறீஸ்தவ வாழ்வு வாழ்ந்து, மோட்ச இராச்சியத்தைச் சுதந்தரித்துக் கொள்வீர்களாக!

மரியாயே வாழ்க!

கார்மெல் உத்தரியம்



உத்தரியம் என்பது ஒரு மேலாடை. கார்மெல் சபை, ஆசீர்வாதப்பர் சபை போன்ற துறவற சபைத் துறவிகள் தங்கள் சபை உடுப்புக்கு மேலாக அணிந்திருக்கிற உடைக்குப் பெயர் தான் உத்தரியம்; இது நிறத்தில் அந்தந்த சபைக்குரிய உடுப்பு நிறமாக இருக்கிறது. தோளிலிருந்து முன்னும் பின்னுமாக பாதம் வரை தொங்கும் நீளமான துணி இது.

துறவிகள் வயல்களிலும், தோட்டங்களிலும் வேலை செய்யும் நேரங்களில் தங்கள் உடுப்பு சேறு அல்லது தூசியால் அழுக்காகாதபடி, உடையின்மீது சாதாரண துணி ஒன்றைக் கட்டிக் கொள்வது வழக்கமாயிருந்தது. நாளடைவில் அது அவர்களது சபை உடுப்புகளில் ஒன்றானது. 11-ம் நூற்றாண்டிலிருந்து சபையில் புதிதாய்ச் சேர்ந்தவர்களுக்கு இதை மந்திரித்துக் கொடுக்கத் துவக்கினார்கள். இதுதான் 'உத்தரியம்' என்ற பெயர் பெற்று சந்நியாச வாழ்வின் அடையாளமாயிற்று. இதை மந்திரிக்கும் சடங்கில், கிறீஸ்துநாதரின் நுகத்தடி, சிலுவை அல்லது கேடயம் என்று பலவிதமான ஞான அர்த்தமுள்ள பல பெயர்களும் இதற்குத் தரப்படுகின்றன. துறவி தன் கடமையை ஒருபோதும் அலட்சியம் செய்துவிடாதிருப்பதன் அடையாளமாக, பல சபைகளில் உத்தரியத்தை ஒருக்காலும் கழற்றாமல் இரவும் பகலும் அணிந்திருக்கிற வழக்கம் ஏற்பட்டது.

துறவிகள் அல்லாத பக்தியுள்ள விசுவாசிகள் துறவற சபைகளின் நற்செயல்களிலும் பேறுபலன்களிலும் பங்கடைய விரும்பி, அவர்களது ஜெப தவ முயற்சிகளில் சிலவற்றைத் தாங்களும் செய்யத் தொடங்கினார்கள். இவர்களுக்கும் சபையின் அடையாளமாக உத்தரியத்தைத் தருவது நல்லதெனத் தோன்றிற்று. ஆனால் குடும்ப வாழ்க்கையில் இருப்பவர்கள் நீண்ட உத்தரியத்தை அணிந்திருப்பது சாத்தியமில்லை என்பதால், அவர்களது வசதியைக் கருதி, துறவற சபைத் தலைவர்கள் இப்போது பயன்படுத்தப்பட்டு வரும் சிறு உத்தரியங்களைச் செய்து கொடுக்க ஆரம்பித்தார்கள்.

இன்று 18 வகை உத்தரியங்கள் இப்போது திருச்சபையின் அங்கீகாரம் பெற்றுள்ளன. விசுவாசிகள் பயன்படுத்தும் சிறிய வகை உத்தரியங்களெல்லாமே சுமார் இரண்டு அங்குல அகலமும், சற்றே அதிக அளவு நீளமும் உள்ள இரு கம்பளித் துண்டுகள்தான். இவற்றில் ஒன்று முதுகிலும் மற்றொன்று நெஞ்சிலும் தொங்கக் கூடிய விதமாய் இரு கயிறுகளால் இணைக்கப்பட்டுள்ளன. சிவப்பு உத்தரியம் நீங்கலாக, மற்ற உத்தரியங்களின் கயிறுகள் அந்தந்த உத்தரியத்தின் நிறமாயிருப்பது அவசியமில்லை; உத்தரியங்களில் ஏதாவது ஒரு படம் அல்லது ஓர் சின்னம் அச்சிடப்பட்டிருப்பது வழக்கம்; ஆனால் இதற்கு ஞானப் பலன் ஏதுமில்லை, இரு கம்பளித் துணித் துண்டுகளும், அவற்றிற்குத் திருச்சபை தரும் மந்திரிப்பும்தான் உத்தரியத்துக்கு அவசியம்.


கார்மெல் உத்தரியம்: வரப்பிரசாதத்தின் ஆடை

1251-ஆம் ஆண்டில் அர்ச். சைமன் ஸ்டாக்கிற்குக் காட்சி தந்த நம் பரிசுத்த மாதா, அவரிடம் தனது பரிசுத்த கார்மெல் உத்தரியத்தைத் தந்து, "இந்த உத்தரியத்தை அணிந்தபடி மரிக்கிறவர்கள்

யாராயினும், அவர்கள் நித்திய அக்கினியால் துன்பப்பட மாட்டார்கள்'' என்று வாக்களித்தார்கள். நம் காலத்தின் மிகப் பெரிய மர்மங்களில் ஒன்று, பெரும்பான்மையான கத்தோலிக்கர்கள் நம் பரிசுத்த மாதாவின் இந்தப் பரலோக வாக்குத்தத்தத்தை அலட்சியம் செய்து விட்டார்கள், அல்லது அதை அடியோடு மறந்து விட்டார்கள். திவ்ய கன்னிகை தொடர்ந்து, *''இந்த உத்தரியத் தைப் பக்தியோடும், இடைவிடாமலும் அணிந்திருங்கள். இது என் ஆடை. இதனால் உடுத்தப் படுவது என்பதற்கு, நீங்கள் தொடர்ந்து என்னைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பதுதான் பொருள். நானும் என் பங்கிற்கு எப்போதும் உங்களைப் பற்றிச் சிந்தித்து, நீங்கள் நித்திய ஜீவியத்தை அடைந்துகொள்ள உங்களுக்கு உதவி செய்கிறேன்'' என்றார்கள்.*

அர்ச். மார்கரீத் மரியம்மாளின் ஆன்ம இயக்குனரும், புகழ்பெற்ற சேசு சபைக் குருவுமாகிய அர்ச். க்ளாட் த லா கொலம்பியேர் நமக்கு ஒரு முக்கியமான குறிப்பைத் தருகிறார்: ''(பரிசுத்த ஜெபமாலை நீங்கலாக,) திவ்ய கன்னிகையின்மீதான நம் அன்பின் எல்லா வடிவங்களும், அதன் பல்வேறு வெளிப்பாட்டு முறைகள் அனைத்தும், பழுப்பு உத்தரியத்தின் அளவுக்கு, மாமரிக்குப் பிரியமானதாக இருக்க முடியாது என்பதாலும், அதன் காரணமாக, இந்த உத்தரியத்தின் அளவுக்கு, நாம் பரலோகத்தை அடைந்துகொள்ள நமக்கு உதவி செய்ய முடியாது என்பதால், பழுப்பு உத்தரியமே அனைத்திலும் அதிகமாக மாமரியால் விரும்பப்படும் பக்தி முயற்சி என்று ஒரு கண நேரத் தயக்கம் கூட இல்லாமல் நான் கூறுகிறேன்'' என்று அவர் கூறுகிறார்.

பழைய ஏற்பாட்டு வரலாறு



எலியாஸ் கண்ட மரியாயின் காட்சி

கார்மெல் மலை மாதா பக்தி, அர்ச். சைமன் ஸ்டாக்கின் காலத்திற்கும், ஏன், நம் பரிசுத்த ஆண்டவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்திற்கும் கூட முந்தியதாக இருக்கிறது! அது கி.மு. எட்டாம் நூற்றாண்டில் தொடங்கியது எனலாம். அந்த நூற்றாண்டில்தான் மாபெரும் தீர்க்கதரிசியான எலியாஸ் பாலஸ்தீனத்திலுள்ள பரிசுத்த கார்மெல் மலைமீது ஏறிச் சென்று, அங்கே காட்சிதியான வாழ்வு மற்றும் ஜெபத்தின் நீண்ட காலப் பாரம்பரியத்தைத் தொடங்கி வைத்தார். கிறீஸ்துநாதர் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பரிசுத்தரான எலியாஸுஸம், அவரைப் பின்சென்றவர்களும் பரம இரகசியமான முறையில் உலகிற்கு வரவிருந்த கார்மெல் மலை இராக்கினி யான கடவுளின் திருத்தாயாருக்குத் தங்களை அர்ப்பணித்தார்கள் என்பதை உணர்வது பிரமிப்பூட்டுவதாக இருக்கிறது. கிட்டத்தட்ட மூவாயிரம் ஆண்டுகளுக்குப் பின், ஜெபம், காட்சி தியானம் மற்றும் மாமரியின் மீதான பக்தி ஆகியவற்றின் பாரம்பரியம் கத்தோலிக்கத் திருச்சபையில் இன்றும் உயிரோடு இருந்து வருகிறது.

காலம் நிறைவேறியபோது, கடவுள் மனிதனாய் அவதரித்தார். தமது திரு இரத்தத்தை விலையாகத் தந்து, நமது இரட்சணியத்தைத் தம் பிதாவிடமிருந்து வாங்கிக்கொண்டார்; தமது திருப்பெயரால் போதிக்கவும், ஆண்டு நடத்தவும், அர்ச்சிக்கவும் பரிசுத்த கத்தோலிக்கத் திருச்சபையை உலகில் ஸ்தாபித்தார். ஒரு பாரம்பரிய வரலாற்றின்படி, சத்தியத் திருச்சபையின் பிறந்த நாளாகிய பெந்தேகோஸ்தே திருநாளன்று, எலியாஸ் மற்றும் அவருடைய சீடர்களின் ஞான சந்ததியினர் கார்மெல் மலையினின்று இறங்கி வந்தார்கள். அவர்களே அந்நாளில் கிறீஸ் தவத்தின் செய்தியை ஏற்றுக்கொள்வதிலும், அப்போஸ்தலர்களால் ஞானஸ்நானம் பெறுவதிலும் முதலாவதாக இருந்தார்கள் என்பது முற்றிலும் பொருத்தமானதாக இருந்தது. இறுதியாக,

அவர்கள் தங்கள் இராக்கினியான திவ்ய கன்னித் தாயாரைச் சந்தித்து, அவர்களுடைய திருவாயி னின்று அமுதமான வார்த்தைகளைக் கேட்டபோது, தாங்கள் ஒருபோதும் மறக்க முடியாத மகத் துவம் மற்றும் அர்ச்சியசிஷ்டதனத்தின் உணர்வால் அவர்கள் மேற்கொள்ளப்பட்டார்கள். தங்கள் பரிசுத்த மலைக்குத் திரும்பி வந்த அவர்கள் அங்கே திவ்ய கன்னிகைக்குத் தோத்திரமாக உலகின் முதல் சிற்றாலயத்தைக் கட்டியெழுப்பினார்கள். உண்மையில் உலகத்தில் மரியாயின் மீது உண்மை பக்தி முதன்முதலாக, கார்மெல் மலையின்மீதே தொடங்கியது என்று நாம் உறுதியாகச் சொல்லலாம். அந்நேரம் முதல் கடவுளின் திருத்தாயாரின் மீதான இந்த பக்தி கார்மெல் மலை வனவாசிகளால், மதிப்பு மிக்க ஒரு ஞானச் சொத்தாக உலகிற்குக் கையளிக்கப்பட்டு வந்துள்ளது.

அர்ச். சைமன் ஸ்டாக்



அர்ச். சைமன் ஸ்டாக் இங்கிலாந்தின் கெண்ட் நகரத்திலிருந்த கார்மெல் மலை மாதா சபையில் தமது **47**-ஆம் வயதில் சேர்ந்தார். ஜெப, தவ வாழ்வு நடத்தும்படி அங்கிருந்து பரிசுத்த நாட்டிலுள்ள கார்மெல் மலைக்கு அனுப்பப்பட்டு, அங்கு பரிசுத்த வாழ்வு நடத்தி வந்த அவரும், அவரது துறவற சகோதரர்களும், கிறீஸ்தவ விசுவாசத்தை அழிக்க முயன்ற அவிசுவாசிகளால் துரத்தப்பட்டு, இங்கிலாந்திற்குத் திரும்பி வந்தார்கள். **1245**-ல் ஏய்லஸ்ஃபோர்ட் என்னுமிடத்தில் நடந்த சபையின் பொதுக் குழு கூட்டத்தில், சைமன் ஸ்டாக் சபையின் அதிசிரேஷ்டராக ஏக மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கார்மெல் உத்தரியம்

இச்சமயத்தில் பல இன்னல்களுக்கு ஆளாகியிருந்த தமது சபைக்கு உதவி செய்யும்படி சைமன் தேவமாதாவிடம் தொடர்ந்து மன்றாடி வந்தார். அவருடைய ஜெபங்களுக்குப் பதிலளிக் கும் விதமாக, பரிசுத்த மாதா இதே **1245**-ம் ஆண்டில், தன் திருக்கரத்தில் ஓர் அழகிய உத்தரியத் தோடு (இது ஒரு முழுமையான மேற்போர்வை.) அவருக்குத் தோன்றி அவரை நோக்கி: "இந்த உத்தரியத்தை அணிந்தபடி இறக்கும் யாரும் நித்திய அக்கினியால் துன்பப்பட மாட்டார்கள் என்பது உனக்கும், கார்மெல் சபைத் துறவிகள் அனைவருக்கும் ஒரு மாபெரும் சலுகையாக இருக்கும். இதை அணிந்தபடி மரிக்கிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள்" என்று அறிவித்தார்கள்.

கார்மெல் உத்தரியத்தின் முதல் புதுமை

அர்ச். சைமன் ஸ்டாக் திவ்ய தாயாரிடமிருந்து பரிசுத்த உத்தரியத்தைப் பெற்றுக்கொண்ட நாளிலேயே அது உலகில் தன் இரட்சணிய வேலையைத் தொடங்கி விட்டது! மாதாவின் காட்சி முடிந்த சற்று நேரத்திற்குள் லிண்ட்டனின் பீற்றர் பிரபு என்பவரால் அவர் அவசரமாக அழைக்கப் பட்டார். அவரால் அனுப்பப்பட்ட ஒருவர் புனிதரிடம் வந்து, "சுவாமி, உடனே வாரும்; பிரபுவின் சகோதரர் அவநம்பிக்கையில் மரிக்கும் ஆபத்தில் இருக்கிறார்" என்று சொல்லி அவரை அழைத்தார். சைமன் ஸ்டாக் உடனே மரித்துக்கொண்டிருந்த அந்த மனிதனைச் சந்திக்கச் சென்றார். அவனது மரணப் படுக்கையின் அருகில் சென்ற அவர் தமது பெரிய உத்தரியத்தை அந்த மனிதனுக்கு மேலாக வைத்து, திவ்ய கன்னிகை தன் வாக்குறுதியைக் காப்பாற்றும்படி அவர்களிடம் மன்றாடினார். அதே கணத்தில் அந்த மனிதன் தன் பாவங்களுக்கு உத்தம

மனஸ்தாபப்பட்டு, நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து, கடவுளின் வரப்பிரசாதத்திலும், அவருடைய நட்புறவிலும் மரித்தான். அன்றிரவே இறந்தவன் தன் சகோதரனாகிய பிரபுவுக்குக் காணப்பட்டு, **"மகா உன்னத வல்லமையுள்ள இராக்கினியின் வழியாகவும், தேவ தண்டனைக்கு எதிரான ஒரு கவசமாக என்னை மூடிய அந்த மனிதரின் அங்கியின் வழியாகவும் நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்"** என்று அறிவித்தான்.

"நவீனப் பதிதர்கள் உத்தரியம் அணியும் வழக்கத்தைக் கேலி செய்கிறார்கள். அதை மிக அற்பமான அபத்தம் என்று அவர்கள் அழைக்கிறார்கள்" என்று அர்ச். அல்போன்ஸ் லிகோரியார் வருத்தத்தோடு கூறுகிறார். ஆனாலும், பல பாப்பரசர்கள் அதை அங்கீகரித்துப் பரிந்துரைத்திருக் கிறார்கள். உத்தரியக் காட்சி நிகழ்ந்து 25 ஆண்டுகளே ஆகியிருந்த நிலையில், பரிசுத்த பாப்பரசர் பத்தாம் கிரகோரியார் உத்தரியம் அணிந்தவராக மரித்து அடக்கம் செய்யப்பட்டார். 600 வருடங்களுக்குப் பின் அவரது கல்லறை திறக்கப்பட்டபோது, அவருடைய உத்தரியம் அழியாத நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

திவ்ய இரட்சகர் சபை ஸ்தாபகரான அர்ச். அல்போன்ஸ் லிகோரியாரும், சலேசிய சபை ஸ்தாபகரான அர்ச். ஜான் போஸ்கோவும் கார்மெல் மலை மாதாவின்பேரில் விசேஷ பக்தி கொண்டிருந்தார்கள், இருவருமே அவர்களுடைய பழுப்பு உத்தரியத்தை அணிந்திருந்தார்கள். அவர்கள் இறந்தபோது, இருவருமே தங்கள் குருத்துவ உடுப்புகளோடும், உத்தரியத்தோடும் அடக்கம் செய்யப்பட்டார்கள். பல வருடங்களுக்குப் பிறகு, அவர்களுடைய கல்லறைகள் திறக்கப்பட்டபோது, அவர்களுடைய சரீரங்களும், அவர்கள் அணிந்திருந்த புனித உடுப்புகளும் தூசியாக மாறியிருந்தன! ஆனால் அவர்களுடைய பழுப்பு உத்தரியம் முற்றிலும் அழிவற்றதாகக் காணப்பட்டது. அர்ச். அல்போன்ஸ் லிகோரியாரின் பரிசுத்த உத்தரியம் இன்றும் உரோமையில் உள்ள அவருடைய மடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

பசாசுக்கு எதிரான பாதுகாவல்

வணக்கத்திற்குரிய பிரான்சிஸ் யிப்பெஸ் என்பவரின் வாழ்வில் நடந்த ஒரு சம்பவம், பரிசுத்த உத்தரியத்திற்குப் பசாசு எந்த அளவுக்குப் பயப்படுகிறது என்று விளக்குகிறது. ஒரு நாள் அவருடைய உத்தரியம் நழுவிக் கீழே விழுந்தது. அவர் அதற்குப் பதிலாக மற்றொரு உத்தரியத்தை அணிய எத்தனித்தபோது, பசாசு அவரை நோக்கி ஊளையிட்டு, "ஏராளமான ஆத்துமங்களை எங்களிடமிருந்து பிடுங்கிக்கொள்கிற அந்த அங்கியைக் கழற்றி விடு!" என்று அலறியது. பிரான்சிஸ் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, பசாசு உண்மையில் எவற்றிற்கு அதிகமாகப் பயப்படுகிறது என்று வெளிப்படுத்துமாறு அதைக் கட்டாயப்படுத்த, அது பதிலுக்கு, "சேசுவின் திருநாமத்திற்கும், மரியாயின் திருநாமத்திற்கும், பரிசுத்த கார்மெல் உத்தரியத்திற்குமே நாங்கள் மிக அதிகமாகப் பயப்படுகிறோம்" என்றது. இவற்றுடன் பரிசுத்த ஜெபமாலை பக்தியையும் நாம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

சாவான பாவத்தில் மரிப்பவனைக் கார்மெல் உத்தரியம் காப்பாற்றாது!

கத்தோலிக்கர்களில் பெரும்பாலானவர்கள் குறிப்பாகத் தங்கள் புதுநன்மை நேரத்தில் முதன் முதலாகக் கார்மெல் உத்தரியம் அணிவிக்கப்படுகிறார்கள். கத்தோலிக்க வேதத்திற்கு மனந் திரும்புகிறவர்கள், கத்தோலிக்க விசுவாசத்தைத் தாங்கள் அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெறும்போது, அதையும் பெற்றுக்கொள்கிறார்கள். ஒருவர் உத்தரிய சபையில் சேர்க்கப்பட்டு,

மாமரித் தாயாரின் இந்தச் சின்னஞ்சிறிய மேலங்கியாக இருக்கிற உத்தரியம் அணிவிக்கப்படும் போது, குருவானவர் அவரை நோக்கி: "இந்த மந்திரிக்கப்பட்ட உத்தரியத்தைப் பெற்றுக்கொள்; மகா பரிசுத்த கன்னிகையின் பேறுபலன்களின் வழியாக, அதை நீ எப்போதும் பாவக் கறையின்றி அணிந்திருக்கும்படியாகவும், அது எல்லாத் தீமையினின்றும் உன்னைப் பாதுகாத்து, நித்திய ஜீவியத்திற்கு உன்னைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டுமென்றும் அவர்களிடம் மன்றாடு" என்ற வார்த்தைகளைச் சொல்கிறார்.

மாமரியின் குடும்பத்தில் ஒருவராக மரிக்கும் ஒவ்வொருவரும், தங்கள் மரண சமயத்தில், மாமரியிடமிருந்து தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் இறுதி வரை நிலைத்திருக்கும் வரத்தை அல்லது, இறுதி உத்தம மனஸ்தாப வரத்தைப் பெற்றுக்கொள்வார்கள் என்பதுதான் உத்தரிய மாதாவின் வார்த்தைகளின் பொருள் என்று வெர்மீஸ்க், அர்ச். ராபர்ட் பெல்லார்மீன், பாப்பரசர் 15-ஆம் ஆசீர்வாதப்பர் போன்ற கத்தோலிக்க வேதசாஸ்திரிகள் விளக்குகிறார்கள்.

கார்மெல் உத்தரியம் அணிந்திருப்பவர்கள் சாவான பாவத்தில் இருந்தாலும், அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்ற அர்த்தத்தில் மாமரி இப்படிக் கூறவில்லை. சாவான பாவத்தில் மரிப்பதன் ஒரே விளைவு நரக தண்டனை மட்டுமே! ஆனால் மாமரியின் வார்த்தைகளை நாம் இப்படி சற்று மாற்றி வாசிக்கலாம்: "இந்த உத்தரியத்தை அணிந்தபடி மரிக்கிறவர்கள், சாவான பாவத்தில் மரிக்க மாட்டார்கள்!" இதை இன்னும் தெளிவாக்கும்படி, பரிசுத்த திருச்சபை, "பக்தியோடு மரிக்கிறவர்கள்" என்ற வார்த்தையை அடிக்கடி சேர்க்கிறது: "குயிகும்குவே இன் ஒக் 'பியே' மோரியென்ஸ், ஏத்தெர்னும் நோன் பாத்ஸியேத்தூர் இன்செந்தியும்" (இந்த உத்தரியத்தை அணிந்தபடி பக்தியோடு மரிக்கிறவர்கள், சாவான பாவத்தில் மரிக்க மாட்டார்கள்!).

ஆகவே, நம் திவ்ய ஆண்டவளின் வாக்குறுதி கடவுளின் நல்லொழுக்கத் திருச்சட்டத்தை விலக்கிவிடுவது அல்ல, அதாவது, நாம் என்ன செய்தாலும், உத்தரியத்தை மட்டும் அணிந்திருந்தால் இரட்சிக்கப்படுவோம் என்பது நம் பரலோக அன்னையின் வாக்குறுதி அல்ல. மாமரியின் வாக்குறுதியை இவ்வாறு திரித்துக் கூறுபவர்களின் மூடத்தனத்தைப் பற்றி அர்ச்சியசிஷ்டவர்களும், பாப்பரசர்களும் நம்மை அடிக்கடி எச்சரித்திருக்கிறார்கள். "திவ்ய கன்னிகை தன்னை நேசிக்கும் அனைவரையும் நேசிக்கிறார்கள் என்பது மிகவும் உண்மை என்றாலும், மரண சமயத்தில் அவர்களுடைய உதவியைப் பெற விரும்பும் எவனும், பாவத்தை விலக்கி, மாமரியின் மகிமைக்காக உழைப்பதன் மூலம் அந்த ஒப்பற்ற நன்மையைப் பெற்றுக்கொள்ளத் தகுதி பெறுவானாக" என்று பாப்பரசர் பதினோராம் பத்திநாதர் கூறுகிறார். மாமரியின் உத்தரிய வாக்குறுதியைத் தவறாகப் புரிந்துகொண்டு, ஒருவன் பாவத்தில் நிலைத்திருந்தால், அவன் உத்தரியம் அணிந்தபடி மரிக்க மாட்டான் என்பதும் உறுதி! ஏனெனில் அது மாமரிக்குக் காட்டப்படும் ஒரு தேவநிந்தையாக இருக்கும்!

அமல உற்பவக் கன்னிகையின் அன்பின் அற்புத அடையாளம்!


மாமரியின் வாக்குறுதி அவர்களுடைய தாயன்பின் அற்புத அடையாளமாக இருக்கிறது. அது அவர்களில் நாம் கொள்ள வேண்டிய நம்பிக்கை மற்றும் சார்புடைமையின் அடையாளமாக நமக்குத் தரப்பட்டுள்ளது. பூமி நமக்கெனத் தான் வைத்திருந்த அனைத்தோடும் நம்மை விட்டு விலகிச் செல்வதாகவும், பயங்கரமுள்ள ஒரு நித்தியம் நம்மை உற்றுநோக்குவதாகவும் நாம் உணரும் அந்த மரண நேரத்தில், நமக்கு ஒரு தாய் தேவைப்படுகிறார்கள். அநேகமாக, சிலுவையடியில், தன் தேவ திருக்குமாரன் மனுமக்களுக்குத் தமது மரண சாசனமாகத் தன்னை நம்

தாயாராக ஒப்புவித்த அதே கணத்தில், இந்த வியாகுல மாதா, நம் மரண நேரத்தில், தனது தாயன்பை நமக்கு உறுதிப்படுத்துவது பற்றி முதன்முதலில் நினைத்தார்கள்! சிலுவையில் அறையுண்டிருந்த நம் திவ்ய மீட்பருக்காகத் தான் நெய்து தந்திருந்த இவ்வுலக ஆடையின்மீது சேவகர்கள் சீட்டுப் போட்டுக்கொண்டிருந்த அதே நேரத்தில், நம் நேச மாதா நமக்காக ஒரு பரலோக ஆடையை நெய்து தருவது பற்றி முதன்முதலில் சிந்தித்தார்கள். "அதை அணிந்தபடி மரிக்கிறவர்கள் நரக நெருப்பால் துன்பப்பட மாட்டார்கள்" என்ற வாக்குறுதியை அதே கணத்தில்தான் நம் அன்னை மரித்துக்கொண்டிருந்த தன் திவ்ய சுதனிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள். மிக அசாதாரணமான வையாகிய இவ்வார்த்தைகள் பழுப்பு உத்தரியத்தின் முழு மதிப்பையும் விளக்குகின்றன என்று சவாரியா குறிப்பிடுகிறார்: "விசேஷமாக, சாத்தான் உலகத்தின் அஸ்திவாரங்களை அசைத்து விடப்போவதாக அச்சுறுத்திக்கொண்டிருக்கும் இக்காலத்தில், நரக சர்ப்பத்தின் தலையை நசுக்குபவர்களைப் பற்றிய அறிவை உலகம் பெற்றுக்கொள்வது அவசியம்" என்கிறார் அவர்.

பரிசுத்த உத்தரியம் ஒரு மௌன ஜெபம்

நம் ஆண்டவர் நமக்குப் பரலோக மந்திரத்தைக் கற்றுத் தந்தது போலவே, நம் பரிசுத்த மாதா தனது பரிசுத்த உத்தரியத்தின் மகத்துவத்தையும், மதிப்பையும் நமக்குக் கற்றுத் தந்தார்கள். அதை ஒரு ஜெபமாக நாம் பயன்படுத்தும்போது, நம் திவ்ய ஆண்டவள் தன் திருக்குமாரனின் திரு இருதயத்தை நோக்கி நம்மைக் கவர்ந்திழுக்கிறார்கள். எனவே, நாம் கழுத்தில் அணிந்திருக்கிற உத்தரியம் நாம் அறியாமலே நமக்காக மௌனமாக சேசுவின் திரு இருதயத்தை நோக்கி எப்போதும் ஜெபித்துக்கொண்டிருக்கிறது. அதை அணிந்திருக்கும்போது நாம் செய்யும் எந்த ஒரு ஜெபமும் உத்தமமான ஜெபமாக ஆகிறது. உத்தரியம் அணிந்திருக்கிற ஒருவன் சோதனை நேரத்தில் தன் அன்புத் தாயாரை நோக்கி அபயக் குரல் எழுப்பும்போது, தீய அரூபி தன் பலத்தையெல்லாம் முழுவதுமாக இழந்து, பரிதாபத்திற்குரிய ஒரு கிழவனைப் போலாகி விடுகிறது! தனது பக்தியுள்ள ஊழியர்களில் ஒருவரான முத்திப்பேறு பெற்ற ஆலன் ரோச் ஒரு முறை இப்படிப்பட்ட ஆபத்தில் தம் திருத்தாயாரின் உதவியைக் கேட்கத் தாமதித்தபோது, "நீ உடனே என் உதவியை மன்றாடிக் கேட்டிருந்தால், இத்தகைய ஆபத்துக்கு உள்ளாகியிருக்க மாட்டாய்!" என்று பரிசுத்த தேவமாதா அவரை அன்போடு கடிந்துகொண்டார்கள்.

பாப்பரசர்களும், அர்ச்சியசிஷ்டவர்களும், கார்மெல் உத்தரியமும்



12-ஆம் பத்திநாதர்: "திவ்ய கன்னித் தாயாரின்மீதான நேசம் எந்த அளவுக்குக் கத்தோலிக்க விசுவாசத்திற்கு உயிரூட்டி, அதன் நல்லொழுக்கத்தின் தரத்தை உயர்த்துகிறது என்பதை அறியாதவர்கள் யாருமில்லை. மனித மனத்தைப் பரலோக போதகத்தால் ஒளிர்வித்து, கிறீஸ்தவ வாழ்வை அனுசரிக்கும்படி ஆத்துமங்களைத் தூண்டுகிற தேவ மாதா பக்தி முயற்சிகளின் வழியாகவே இந்த நல்விளைவுகள் குறிப்பாக உறுதிப்படுத்தப்படுகின்றன. இந்த பக்தி முயற்சிகளில் முதல் நிலையில் உள்ளவற்றில் ஒன்று, பரிசுத்த கார்மெல் உத்தரிய பக்தியாகும். தனது எளிமையால் அனைவரின் மனங்களுக்கும் உகந்ததாக இருக்கும் இந்த பக்தி, விசுவாசிகளிடையே வெகுவாகப் பரவி, ஏராளமான, பரலோகப் பயனுள்ள கனிகளைப் பிறப்பித்துள்ளது.

“கடந்து போகிற எந்தக் காரியத்தையும் அல்ல, மாறாக, பரலோக நித்திய ஜீவியத்தை ஆத்துமங்கள் அடைந்துகொள்வதே உத்தரிய மாதாவின் வாக்குறுதியின் பலனாக இருக்கிறது. அனைத்திலும் மேலான முக்கியத்துவம் உள்ள இந்தக் காரியத்தைப் பத்திரமான முறையில் நம்முடையதாக்கிக்கொள்வது இந்த உத்தரிய பக்தியின் நோக்கமாகும். ஏனெனில், மாமரியின் ஆடை என்று அழைக்கப்படக்கூடிய இந்தப் புனித உத்தரியம், தேவ தாயாரின் பாதுகாவலின் அடையாளமாகவும், பிணையாகவும் இருக்கிறது...

“மகா கனிந்த நேசமுள்ள இந்த மாதா, தனது பரிந்து பேசுதலின் வழியாக, கூடிய விரைவில், உத்தரிக்கிற ஸ்தலத்தில் தங்கள் பாவங்களுக்கு உத்தரிக்கும் தன் பிள்ளைகளுக்குப் பரலோக வாசல்களைத் திறந்து தருவதைத் தாமதிக்க மாட்டார்கள் என்பது உறுதி. **சனிக்கிழமைச் சலுகையை அடிப்படையாகக் கொண்ட நம்பிக்கையாக இது இருக்கிறது.”**

பல அர்ச்சியசிஷ்டவர்களும், பாப்பரசர்களும், வேதசாஸ்திரிகளும் உத்தரிய பக்தியைத் தாங்கள் முழு மனதோடு ஏற்றுக்கொள்வதாக அறிக்கையிட்டிருக்கிறார்கள். அவர்களில் முக்கிய மானவர்கள்: அர்ச். ராபர்ட் பெல்லார்மீன், அர்ச். பீற்றர் க்ளாவர், அர்ச். அல்போன்ஸ் லிகோரியார், அர்ச். மரிய வியான்னி அருளப்பர், அர்ச். ஜான் போஸ்கோ, பாப்பரசர்கள் பத்தாம் கிரகோரியார், 13-ஆம் ஆசீர்வாதப்பர், 11-ஆம் பத்திநாதர், 12-ஆம் பத்திநாதர் ஆகியோர்.

பரிசுத்த உத்தரிய பக்தியைப் பற்றிப் **பாப்பரசர் பதினான்காம் ஆசீர்வாதப்பர்,** *“ஏராளமான, மிகப் பெரும் ஞானப் பலன்களால் செறிவூட்டப்பட்டிருக்கிற நம் கார்மெல் மாதாவின் இந்த பக்தியைப் புறக்கணிக்க எவனும் துணியாதிருப்பானாக. ஏனெனில், இந்த பக்தியை அனுசரிப் பவர்களுக்காக, திவ்ய கன்னிகையின் மன்றாட்டின் மூலம், சர்வேசுரன் ஏராளமான அற்புதங்களை நிகழ்த்தியிருக்கிறார்” என்கிறார்.*

பாப்பரசர் 13-ஆம் சிங்கராயர், “கார்மெல் உத்தரியத்தின் மகத்துவமுள்ள தொடக்கமும், பல நூற்றாண்டுகளாகக் கிறீஸ்தவ மக்களினங்களிடையே அதன் ஆச்சரியத்திற்குரிய பரவுதலும், அதனால் விளைவிக்கப்படும் அர்ச்சிப்பின் கனிகளும், அதன் மூலம் நிகழும் மாபெரும் புதுமை களும், அதை ஆச்சரியத்திற்குரிய அளவில் புகழ்ச்சிக்குரியதாக ஆக்குகின்றன” என்கிறார்.

பாப்பரசர் 11-ஆம் பத்திநாதர், சனிக்கிழமைச் சலுகை வழங்கப்பட்ட ஆறாம் நூற்றாண்டு நினைவாக, 1922, மார்ச் 18 அன்று தாம் எழுதிய ஒரு மடலில், “பரலோக மாதா தன் பிள்ளைகளுக்குக் காண்பிக்கும் தாராளமுள்ள நன்மைத்தனத்தை நாம் சிந்திக்கும்போது, உத்தரிய சபையைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு உரிமையுள்ள ஞானப் பலன்களைப் பெறுவதற்கு, பரிந்துரைக்கப்பட்ட பரிசுத்த நிபந்தனைகளை அனுசரிப்பதில் நிலைத்திருக்கும்படியாக அவர்களுக்கு அறிவுறுத்துவது ஒன்றே போதுமானதாக இருக்கிறது என்பது உறுதி” என்று கூறுகிறார்.

பாப்பரசர் 12-ஆம் பத்திநாதர், “முதலாம் மற்றும் இரண்டாம் சபைகளின் அடைபட்ட மடங் களில் வாழ்பவர்களானாலும் சரி, மூன்றாம் சபையை அல்லது உத்தரிய சபையைச் சேர்ந்தவர் களானாலும் சரி, கார்மெல் சபையினர் அனைவரும், நம்முடைய மகா பரிசுத்த திருத்தாயாரின் அதே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும், ஒரு விசேஷ பந்தத்தால் அதனோடு இணைக்கப்பட்ட வர்களாகவும் இருக்கிறார்கள். திவ்ய கன்னிகையின் இந்தப் பாதுகாவலில் அவர்கள் அனைவரும் தாழ்ச்சி மற்றும் மாசற்றதனத்தின் கண்ணாடி ஒன்றைக் காண்பார்களாக! இந்த உத்தரியமாகிய ஆடையின் எளிமையிலேயே அவர்கள் அடக்கவொடுக்கத்தினுடையவும், எளிமையினுடை

யவும் ஒரு சுருக்கமான பாடம் ஒன்றை வாசித்து அறிந்துகொள்வார்களாக; எல்லாவற்றிற்கும் மேலாக, தாங்கள் இரவும், பகலும் அணிந்திருக்கும் இதே ஆடையில், தேவ உதவிக்கான தங்கள் ஜெபங்களின் வாய்ச்சாலகமுள்ள அடையாளத்தைக் கண்டுகொள்வார்களாக" என்று கூறுகிறார்.


சனிக்கிழமை சலுகை



22-ஆம் அருளப்பர்

பாப்பரசர் 22-ஆம் அருளப்பர், 1322, மார்ச் 3 அன்று தாம் வெளியிட்ட ஓர் ஆணை மடலின் மூலம் இந்தச் சனிக்கிழமை சலுகையை நமக்கு வழங்கியிருக்கிறார். பரிசுத்த உத்தரிய மாதா அவருக்குத் தோன்றி, உத்தரியம் அணிபவர்களைக் குறித்து, "தேவ வரப்பிரசாதத்தின் மாதாவாகிய நான் சனிக்கிழமைகளில் உத்தரிக்கிற ஸ்தலத்திற்குள் இறங்கி வருவேன். அவர்களில் யாரையாவது அவர்களது மரணத்திற்குப் பின் நான் அங்கே காண்பேன் என்றால், அவர்களை அங்கிருந்து விடுவித்து, நித்திய ஜீவியத்தின் பரிசுத்த மலைக்கு அவர்களை அழைத்துச் செல்வேன்" என்று வாக்களித்தார்கள். மேற்கூறிய ஆணை மடலில் இந்த வாக்குறுதி காணப்படுகிறது.

உத்தரியத்தை எப்போதும் அணிந்திருந்து, (இந்த ஆணைமடலின்படி, பாப்பரசர் 22-ம் அருளப்பருக்குத் திவ்ய கன்னிகை அறிவித்த) இரு நிபந்தனைகளையும் நிறைவேற்றுபவர்கள், தங்கள் மரணத்திற்குப் பின்வரும் முதல் சனிக்கிழமையன்று உத்தரிக்கிற ஸ்தலத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்ற அர்த்தத்தின்படிதான் இந்தச் சனிக்கிழமை சலுகை பொதுவாகப் புரிந்துகொள்ளப்படுகிறது.



ஐந்தாம் சின்னப்பர்

ஆனால் சில சந்தர்ப்பங்களில், இதற்கு விளக்கமாகத் திருச்சபை அதிகார பூர்வமாகச் சொல்லியிருப்பதெல்லாம், சனிக்கிழமை சலுகையின் இந்த நிபந்தனைகளை நிறைவேற்றுபவர்கள், தங்கள் மரணத்திற்குப் பிறகு, மிக விரைவில், மாமரியின் பரிந்துரையின் வழியாக, ஒரு சனிக்கிழமையன்று உத்தரிக்கிற ஸ்தலத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்பது மட்டுமே. இந்த அதிகாரபூர்வ அறிக்கை, பாப்பரசர் ஐந்தாம் சின்னப்பரால் வெளியிடப்பட்டது. சனிக்கிழமை சலுகையின் தொடக்கத்தையும் அதன் தன்மையையும் பற்றிய குழப்பங்கள் எழுந்த ஒரு காலகட்டத்தில், பாப்பரசர் பின்வருமாறு அறிக்கையிட்டார்:

"குறிப்பாக, திருச்சபையால் தனக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள சனிக்கிழமைகளில் ஒன்றின் போது, திவ்ய கன்னிகை தன் தொடர்ச்சியான மன்றாட்டுகளாலும், பேறுபலன்களாலும், தனது விசேஷ பாதுகாவலாலும், கார்மெல் மலை மாதா பக்த சபையை (உத்தரிய சபையைச்) சேர்ந்த சகோதர, சகோதரிகளின் ஆத்துமங்களுக்கு உதவி செய்வார்கள்... என்று போதிப்பது அனுமதிக்கப்படுகிறது." "மரணத்திற்குப் பிந்தைய இந்த விசேஷ பாதுகாவல்தான்" உத்தரிய பக்தியின் எல்லாப் பலன்களிலும் மிகப் பெரிய இரண்டு பலன்களில் ஒன்றாக மதிக்கப்படுகிறது. மற்றொரு பலன், உத்தரிய பக்தி நம் இருதயங்களுக்கும், மரியாயின் மாசற்ற இருதயத்திற்கும் இடையே உருவாக்குகிற நெருக்கமான பிணைப்பு ஆகும்.

சனிக்கிழமைச் சலுகைக்குரிய நிபந்தனைகள்:

1. பழுப்பு உத்தரியத்தைப் பக்தியோடு அணிந்திருத்தல்;

2. தனது ஜீவிய அந்தஸ்தின்படி பரிசுத்த கற்பை அனுசரித்தல்;

3. ஒவ்வொரு நாளும் திவ்ய கன்னிகையின் சிறிய மந்திரமாலையை ஜெபித்தல். (இதைச் செய்வதைக் கடினமானதாகக் காண்பவர்கள், *1901,* ஜூன் மாதத்தில், ஞானப் பலன்களுக்கான திருச்சங்கத்தின் ஆணைமடல் ஒன்றில், பாப்பரசர் *13*-ஆம் சிங்கராயர் தந்துள்ள உத்தரவின்படி, தங்கள் ஆன்ம குருவின் அனுமதி பெற்று, அதற்குப் பதிலாக ஜெபமாலை அல்லது வேறு ஏதாவது ஒரு பக்தி முயற்சியை அனுசரிக்கலாம்.)

உத்தரியம் அர்ப்பணத்தின் அடையாளம்



உத்தரியம் என்பது ஓர் ஆடை, நம் தேவமாதாவின் ஆடை. நாம் ஏற்கெனவே கூறியுள்ளது போல், அவர்கள் தன் திருக்கரத்தில் உத்தரியத்தைத் (முழு அளவிலான ஆடையை) தாங்கியபடி, அர்ச். சைமன் ஸ்டாக்கிற்குத் தோன்றினார்கள். அவர்களும் அதே உத்தரியத்தை அணிந்திருந்தார்கள். அதன்பின், மீண்டும் *1917*-ஆம் ஆண்டில் பாத்திமாவில் தோன்றி, ரஷ்ய அர்ப்பணத்திற்காக வேண்டுகோள் விடுத்து, அது மனந்திரும்பும் என்று அறிவித்தார்கள். ஏழுரை நூற்றாண்டுகளுக்கு முன்பே அர்ச். சாமிநாதர், **"ஒரு நாள் ஜெபமாலையையும், உத்தரியத்தையும் கொண்டு, தேவ தாயார் உலகத்தை இரட்சிப்பார்கள்"** என்று தீர்க்கதரிசனம் உரைத்தார்.



நாம் உத்தரியம் அணியும்போது, பரலோகத் தறிகளில் நெய்யப் பட்டு, நம் பரிசுத்த ஆண்டவளின் திருக்கரங்களாலேயே இவ்வுலகிற்குக் கொண்டு வரப்பட்ட ஓர் ஆடையை அணிகிறோம். அதை அணியும் போது, நம் திவ்ய ஆண்டவள் இவ்வாக்குறுதியை அளித்தபோது அணிந்திருந்த அதே ஆடையை நாம் அணிகிறோம். பாத்திமாவின் கடைசிக் காட்சியில் திவ்ய கன்னிகை கார்மெல் மலை மாதாவாக, உத்தரியம் அணிந்தபடி காட்சியளித்தார்கள். உத்தரியத்தை அணியும் போது, நாம் நம் திவ்ய மாதாவுக்கு நம்மை அர்ப்பணிக்கிறோம், அவர்களுடைய பாதுகாவலுக்கு நம்மைக் கையளிக்கிறோம், அவர்களுக்கு முழுவதுமாகச் சொந்தமாகிறோம், அவர்களுடைய புண்ணியங்களாலும், பரிசுத்த ஜீவியத்தாலும், அவற்றின் வழியாகப் பரலோக மகிமையாலும் உடுத்தப்படும் கடமை நம்மீது சுமத்தப்படுகிறது என்பதை எப்போதும் நினைவில் கொண்டிருப்போம். உத்தரியம் அடிப்படையில் ஒரு துறவற அங்கியாக இருக்கிறது. அதை அணிபவர்கள் இவ்வுலகில் வாழ வேண்டியிருந்தாலும், புண்ணிய ஜீவியத்தில் துறவிகளைப் போல வாழ அழைக்கப்படுகிறார்கள்.

*1950*ஆம் ஆண்டில் பாப்பரசர் *12*ஆம் பத்திநாதர் உத்தரியம் தொடர்பாக, "இந்த ஆபத்தான காலகட்டத்தில் நாம் தனிப்பட்ட முறையில் வலியுறுத்திப் போதித்துக்கொண்டிருக்கும் மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு நீங்கள் உங்களை அர்ப்பணிக்கும் அடையாளமாக உங்கள் உத்தரியம் இருப்பதாக" என்னும் அற்புதமான வார்த்தைகளைக் கூறினார். அதே ஆண்டில், பாத்திமாவின் இறுதிக் காட்சியில், பரலோக இராக்கினி ஏன் தன் திருக்கரங்களில் உத்தரியத்தை வைத்திருந்தார்கள் என்று சகோதரி லூஸியாவிடம் கேட்கப்பட்டபோது, "ஏனெனில்

அனைவரும் உத்தரியம் அணிய வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள்'' என்று அவள் பதிலளித்தாள். இன்னும் தெளிவான ஒரு விளக்கம் தரும்படி அவள் வற்புறுத்திக் கேட்கப்பட்ட போது, **''ஏனெனில் அது மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு நம் அர்ப்பணத்தின் அடையாளமாக இருக்கிறது''** என்று அவள் அறிவித்தாள்.

பாத்திமாவும், உத்தரியமும்

உலகம், முதல் உலகப் போரின் மிகப் பெரும் இருளுக்குள் தள்ளப்பட்டபோது, நம்பிக்கை ஒளியாக, பரிசுத்த சமாதானத்தின் இராக்கினி துன்புறும் தன் பிள்ளைகளைச் சந்திக்க பாத்திமா வுக்கு இறங்கி வந்தார்கள்.

தான் யாரென்று அறிவிக்குமுன்பே, ''திவ்ய கன்னிகை மட்டுமே உலகத்தைக் காப்பாற்ற முடியும்'' என்று கூறினார்கள். அதன்பின், அடுத்து வந்த காட்சிகளில் தான் இறங்கி வருவது பற்றிய சாட்சியத்தை அனைவருக்கும் தந்தபின், ''ரஷ்யா என் மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பணிக் கப்பட்டால், அது மனந்திருப்பப்படும், சமாதானம் நிலவும்'' என்று கூறினார்கள். இதன் பொருள்: ''நீங்கள் என்னிடம் வருவீர்கள் என்றால், கிறீஸ்துநாதரின் அரசாட்சி உலகில் ஸ்தாபிக்கப்படும்'' என்பதேயாகும்.

மிகுந்த பிரியத்திற்குரிய மாதாவே, நாங்கள் எப்படி உங்கள் மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பணிக்கப்பட முடியும்? நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

''அனுதினமும் **53** மணி ஜெபமாலை சொல்லுங்கள்; என் நிபந்தனைகளின்படி உத்தரியம் அணிந்திருங்கள்; உங்கள் வாழ்க்கையைத் திருத்துங்கள்'' என்கிறார்கள் நம் அன்னை.

1917, அக்டோபர் **13** அன்று நடைபெற்ற பரிசுத்த ஜெபமாலை இராக்கினியின் ஆறாவது பாத்திமா காட்சியில், குழந்தைகள் மட்டும் கண்ட மூன்று நிலைக் காட்சிகளில் மூன்றாவது காட்சி கார்மெல் மலை மாதாவின் காட்சியாகும். மகா பரிசுத்த கன்னிகை மகிமை பொருந்திய பரலோக பூலோக இராக்கினியாகத் தனது தெய்வீகத் திருச்சுதனைத் தன் மடி மீது வைத்தபடி, கார்மெல் உத்தரியம் அணிந்தவர்களாகக் காணப்பட்டார்கள். இந்தக் காட்சியை லூசியா மட்டுமே கண்டாள். எனவே, கார்மெல் உத்தரியம் அணிந்து, மாதாவின் விருப்பப்படி வாழும் அவர்களுடைய பிள்ளைகள், இந்த மகிமையின் அரசியின் மக்களாக ஒரு நாள் பரலோகத்தில் அரசாளுவார்கள் என்ற உண்மைக்கு இந்தக் காட்சி ஒரு சாட்சியமாகத் தரப்பட்டது என்று நாம் உறுதியாகக் கூறலாம்.

ஆனால் துர்ப்பாக்கியமான விதத்தில், பரிசுத்த ஜெபமாலை, பரிசுத்த உத்தரியம் என்பவை போன்ற ''சிறிய காரியங்களைக்'' கொண்டு தேவமாதா உலகத்தைக் காப்பாற்றுவார்கள் என்று மனதார நம்பும் ''சிறிய ஆத்துமங்கள்'' மிகவும் சிறிய எண்ணிக்கையில் இருக்கிறார்கள். பெரும் பாலான உலகத்தன்மையான மனிதர்கள் பெரும் நிறுவனங்கள், கூட்டங்கள், திட்டங்கள், அரசியல் போன்ற ''பெரிய'' காரியங்களின் மூலம்தான் உலகம் காப்பாற்றப்பட முடியும் என்று மூடத்தனமாக நம்புகிறார்கள். தாவீதின் வெற்றிக்குப் பின்னும் கோலியாத்தையே பெரியவனாக நினைக்கிற மூடர்கள் இவர்கள். ஜெபமாலை, உத்தரியம் ஆகியவற்றின் வழியாக மரியாயின் மாசற்ற இருதயத்தைச் சென்றடைந்து, இரட்சணியத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று நம்ப இயலாத இந்தப் ''பெரிய ஆன்மாக்கள்'' கிறீஸ்துநாதரே நேரடியாக ஒளிரும் மேகம் ஒன்றின் மீது இறங்கி வந்து, பெரும் அற்புதங்களைச் செய்து, உலகத்தைத் திருத்த வேண்டுமென்று எதிர்பார்க்

கிறார்கள். இப்படிப்பட்ட "பெரிய" ஆன்மாக்கள்தான் இன்று உலகில் மிக மிகப் பெரிய எண்ணிக்கையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பரிதாபத்திற்குரிய நிலையில், தங்களால் முடிந்த வரை சிறப்பாக நம் திவ்ய ஆண்டவளின் எளிய பாத்திமா வேண்டுகோள்களை நிறைவேற்றுவதும், முடிந்த வரை சீக்கிரமாக வேறு ஏராளமான ஆன்மாக்கள் அவற்றை நிறைவேற்றும்படி அவற்றை வற்புறுத்துவதும், உலகத்தில் கிறீஸ்துநாதரின் இராச்சியத்தைத் தங்கள் கரங்களில் தாங்கியுள்ள சிறிய ஆத்துமங்கள் அனைவருடையவும் கடமையாக இருக்கிறது. இது செய்யப்படும்போது, கிறீஸ்துநாதரின் அரசாட்சி பூலோகத்தில் ஸ்தாபிக்கப்படும்; அப்போது நரகத்தின் வல்லமைகள் மாசற்ற கன்னிகையால் சிதறடிக்கப்படும். அப்போது, அப்போது மட்டுமே, அரசர்களுக்கு அரசர் தம் முடைய திருச்சிலுவையினின்று, சகல மனித இருதயங்களாகிய சிம்மாசனத்திற்கு இறங்கி வருவார், அப்போதுதான் சமாதானம் நிலவும்.

இதுதான் நம் திவ்ய அன்னை பாத்திமாவில் தந்த வாக்குறுதியாகும்.

கார்மெல் உத்தரியம்: ஒரு வரப்பிரசாதக் கருவி (a Sacramental)

வரப்பிரசாதக் கருவிகள் என்பவை புனித அடையாளங்கள் ஆகும். புகை என்பது நெருப்பின் இயல்பான அடையாளமாக இருப்பது போல, உத்தரியம் ஓர் இயல்பான அடையாளம் அல்ல. புகை உள்ளரங்கமாக நெருப்போடு தொடர்புள்ளதாக இருக்கிறது. அதிலிருந்தே நெருப்பின்றிப் புகையாது என்ற முதுமொழி வருகிறது.

இதற்கு மாறாக, பரிசுத்த உத்தரியம் பாரம்பரியத் தன்மையுள்ள அடையாளமாக இருக் கிறது. இப்படி நாம் சொல்லும்போது, வெளியிலிருந்து செயல்படும் ஒரு பொருளின் அடை யாளத்தை நாம் குறிப்பிடுகிறோம். இவ்வாறு, திருமண மோதிரம் தம்பதியரிடையே பரஸ்பர அன்பு மற்றும் நிலையான பிரமாணிக்கம் ஆகியவற்றின் அடையாளமாக அல்லது பிணையாக இருக்கிறது. பாரம்பரிய அடையாளமாக இருக்கிற இவ்வகையான அடையாளத்தில், ஒரு பொருளுக்கும், அது குறித்துக் காட்டுகிற காரியத்திற்கும் இடையிலான தொடர்பை ஏற்படுத்து கிற வெளிப் பொருள் ஒன்றின் தலையீடு இருக்க வேண்டும். வரப்பிரசாதக் கருவிகளைப் பொறுத்த வரை, திருச்சபைதான் இந்தத் தொடர்பைத் தீர்மானிக்கிறது.

வரப்பிரசாதக் கருவிகள் திருச்சபையின் மன்றாட்டால் பெறப்படுகிற நன்மைகளையும், விசேஷமாக ஞான வரப்பிரசாதங்களையும் குறிக்கின்றன. பரிசுத்த படங்கள், சுரூபங்கள், பதக்கங்கள், பரிசுத்த தீர்த்தம், மந்திரிக்கப்பட்ட குருத்தோலை, ஜெபமாலை, உத்தரியம் போன்றவை, தேவத்திரவிய அனுமானங்கள் விளைவிக்கும் பிரதான நன்மையைப் பெற்றுக் கொள்ள ஒருவனை ஆயத்தம் செய்யும் வழிகளாக இருக்கின்றன. இந்தப் பிரதான நன்மை சேசுவுடனான அதிக நெருக்கமான ஒன்றிப்பேயன்றி வேறு எதுவுமில்லை.

உதாரணமாக, அர்ச். அவிலா தெரேசம்மாள் தன் வாழ்வில் பரிசுத்த தீர்த்தத்தைப் பற்றியும், இந்த வரப்பிரசாதக் கருவி பசாசுக்கு எதிராகக் கொண்டுள்ளதாகத் தான் உணர்ந்த வல்லமையைப் பற்றியும் பேசுகிறாள். இந்த வல்லமை எப்படி பரிசுத்த தீர்த்தமாகிய பொருளிலிருந்தே வராமல், திருச்சபையின் ஜெபத்திலிருந்து வருகிறது என்றும் அவள் விளக்குகிறாள்.

தேவத்திரவிய அனுமானங்களோடு சேர்ந்து, வரப்பிரசாதக் கருவிகள் ஏறக்குறைய மனித வாழ்வின் எல்லா அம்சங்களையும் தேவ வரப்பிரசாதத்தைக் கொண்டு அர்ச்சிக்கின்றன. கிறீஸ்து

நாதரின் திருப்பாடுகளும், மரணமும், உயிர்ப்பும்தான் தேவத்திரவிய அனுமானங்களைப் போலவே வரப்பிரசாதக் கருவிகளுக்கும் வல்லமையின் ஊற்றாக இருக்கிறது.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் தண்ணீர், வார்த்தைகள், எண்ணெய், தைலம் பூசுதல், துணி, தேன் மெழுகு, திருப்படங்கள், பாடல்கள் ஆகியவை தேவத்திரவிய அனுமானங்களுக்கும், வரப் பிரசாதக் கருவிகளுக்கும் தேவைப்படும் பொருட்களாக இருக்கின்றன. கார்மெல் உத்தரியம், சேசுநாதருடைய வல்லமை மாமரியின் வழியாக நம்மீது செயல்படுத்தப்படுவதற்கான ஒரு வரப் பிரசாதக் கருவியாக இருக்கிறது.

உத்தரியப் பதக்கம் அல்லது உத்தரிய சுரூபம்



அதிக வெப்பமானவையும், வறண்டவையுமான நிலப்பரப்புகளில் வாழ்வதால், துணியாலான கார்மெல் உத்தரியத்தை அணிய முடியாத வர்களின் வேண்டுகோளின்பேரில், அர்ச். பத்தாம் பத்திநாதர் 1910, டிசம்பர் 16 அன்று, அவர்கள் அதற்குப் பதிலாக உலோகத்தால் ஆன உத்தரியப் பதக்கத்தை அணிந்துகொள்ள அனுமதி வழங்கினார். பிற்பாடு இந்த அனுமதி அனைத்து கத்தோலிக்கர்களுக்கும் விரிவுபடுத் தப்பட்டது. உத்தரியப் பதக்கம் துணியாலான உத்தரியத்திற்குத் தரப் பட்டுள்ள அனைத்து சலுகைகளையும் தானும் கொண்டிருக்கும் அதே வேளையில், அர்ச். பத்தாம் பத்திநாதரே அதை விட, துணியாலான கார்மெல் உத்தரியத்திற்குத்தான் அதிக முக்கியத்துவம் தந்தார்: "உத்தரி யப் பதக்கம் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பழுப்பு உத்தரியத் திற்கு மாற்றாகப் பயன்படுத்தப்படுவதை நான் விரும்பவில்லை. நான் துணியாலான உத்தரியம்தான் அணிகிறேன்; அதை நாம் ஒருபோதும் கழற்றி விடாதிருப் போமாக" என்று அவர் கூறினார்.

அவருக்குப் பின்வந்த பாப்பரசர்களாகிய 11ஆம் பத்திநாதர், 12ஆம் பத்திநாதர், விசேஷமாக, அவருக்கு அடுத்த பாப்பரசரான 15ஆம் ஆசீர்வாதப்பர் ஆகிய அனைவரும் துணியாலான உத்தரியத்தைத்தான் கூடக் குறைய அளவில் வற்புறுத்தினார்கள். இதை வலியுறுத்தும் விதமாக, பாப்பரசர் 15ஆம் ஆசீர்வாதப்பர், "பழுப்பு உத்தரியம்தான் அணியப்பட வேண்டும் என்பது நம் விருப்பமாக இருக்கிறது என்பதை நீங்கள் காணும்படியாக, உத்தரியப் பதக்கத்திற்கு இல்லாத ஒரு வரப்பிரசாதத்தை நாம் பழுப்பு உத்தரியத்திற்கு வழங்குகிறோம்" என்றார். அதன்பின், பழுப்பு உத்தரியத்தை நாம் முத்தமிடும் ஒவ்வொரு முறைக்கும் ஒரு ஞானப் பலனை அவர் வழங்கினார்.

துணியாலான உத்தரியத்திற்கு ஒரு பாரம்பரிய வரலாறு இருக்கிறது. உத்தரியப் பதக்கத்திற்கு அது கிடையாது. அது எழுநூறு வருடங்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்த ஓர் அடையாளமாக இருக்கிறது. . . அது அர்ச். பீற்றர் க்ளாவர், அர்ச். சிலுவை அருளப்பர், அர்ச். அல்போன்ஸ் லிகோரியார், அர்ச். பிரான்சிஸ் சவேரியார், அர்ச். குழந்தை சேசுவின் தெரேசம்மாள், அர்ச். க்ரிஞ்ஞோன் லூயி த மோன்போர்ட், க்ளாட் த லா கொலம்பியேர் போன்ற அர்ச்சியசிஷ்டவர் களுக்கும், வேறு எண்ணற்ற பரிசுத்த ஆத்துமங்களுக்கும் மிகப் பிரியமான பக்தி முயற்சியாக இருந்தது. இவர்கள் திவ்ய கன்னிகையின் மீதான தங்கள் பக்தியில் பரிசுத்த ஜெபமாலையோடு உத்தரியம் இணைந்திருப்பதாகவே கண்டு அதற்கு மதிப்பளித்தார்கள்.

சேசு சபையைச் சேர்ந்தவரும், திருச்சபைச் சட்ட வல்லுனரும், வேதசாஸ்திரியுமான சுவாமி வெல்மீஸ்க் என்பவர்: "கார்மெல் உத்தரியமாகிய முதல் உத்தரியத்தை கனப் படுத்தும்படியாக, இந்தப் பழுப்பு உத்தரியம்தான் வழக்கமான வடிவத்தில் எப்போதும் அணியப்பட வேண்டும் என்றும், பதக்க உத்தரியம் வேறு வழியே இல்லாதபோது மட்டும் அதற்கு மாற்றாகப் பயன் படுத்தப்பட வேண்டும் என்றும் நான் விரும்புகிறேன்" என்ற வார்த்தைகளில் தமது விருப்பத்தை வெளிப்படுத்துகிறார். பழுப்பு உத்தரியத்திற்குப் பதிலாக அன்றி, குறைந்த முக்கியத்துவம் உள்ள மற்ற உத்தரியங்களுக்கு மாற்றாக, பழுப்பு உத்தரியத்தோடு பதக்க உத்தரியத்தையும் சேர்த்து அணிவது ஞானமுள்ள செயலாக இருக்கும்.

பரித்தியாகங்கள் செய்து ஒப்புக்கொடுப்பது உத்தரிய பக்தியின் ஒரு பகுதியாக இருக்கிறது... நம் திவ்ய ஆண்டவள் உத்தரியத்தைப் பயன்படுத்துபவர்களுக்கு ஏராளமான காரியங்களை வாக்களிக்கிறார்கள் . . . ஒரு சில சின்னச் சின்ன அசௌகரியங்களுக்காக, துணியாலான உத்தரி யத்தை விலக்கி விட்டு, உத்தரிய சுரூபத்தைப் பயன்படுத்தும்போது, நம் பரிசுத்த மாதா நம்மிடம் கேட்கிற ஒரு மிகச் சிறிய பரித்தியாகத்தைக் கூட நாம் செய்ய விரும்பவில்லை என்று காட்டு கிறோம். உத்தரிய சுரூபம் அல்லது பதக்கம் பரிசுத்த திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பது உண்மைதான், என்றாலும், தேவ மாதா தனது பிள்ளைகள் தனது மேற்போர்வையால் போர்த்தப்பட்டு, நரக சர்ப்பத்திடமிருந்து பாதுகாக்கப்பட வேண்டுமென்றே விரும்புகிறார்கள்.

உத்தரிய ஒழுங்குகள்

உத்தரியத்தை யார் வேண்டுமானாலும் தயாரிக்கலாம், யாரும் அதை விலைக்கு வாங்கலாம். அது செல்லத்தக்கதாக இருப்பது மட்டுமே முக்கியமானது.

உத்தரியத்தின் வழக்கமான நிறம் பழுப்பு ஆகும். ஆனால் அது பழுப்பு நிறத்திற்கும், கறுப்பு நிறத்திற்கும் இடைப்பட்ட எந்த ஓர் இருண்ட பழுப்பு நிறத்திலும் இருக்கலாம். உத்தரியம் முழுவதும் கம்பளித் துணியால் ஆனதாக இருக்க வேண்டும்.

உத்தரியத்தின் இரு கம்பளித் துண்டுகளையும் இணைக்கும் கயிறுகள் எந்த ஒரு நல்ல மூலப் பொருளாலும் செய்யப்பட்டதாகவும், எந்த நிறத்திலும் இருக்கலாம்.

உத்தரியத்தின் மீது அலங்காரங்கள் அல்லது படங்கள் தேவையில்லை. ஆயினும் பரிசுத்த கார்மெல் மலை மாதாவின் திருப்படம், அல்லது அவர்கள் அர்ச். சைமன் ஸ்டாக்கிடம் உத்தரியத்தை ஒப்படைப்பதைச் சித்தரிக்கும் திருப்படம் பொருத்தமானதாக இருக்கும்.

உத்தரியத்தின் ஒரு பகுதி உடலுக்கு முன்னும், மற்றொன்று உடலுக்குப் பின்னும் தொங்கும் விதமாக அது அணியப்பட வேண்டும். வேறு எந்த விதத்திலாவது அதை அணிந்தால், அணிபவர் ஞானப் பலன் எதையும் பெற முடியாது. உத்தரியத்தை உடைகளுக்குள், நேராகத் தோலின்மீது அணிவது அவசியமில்லை. நாம் நம் ஆடைகளுக்கு மேலாகவும் கூட அதை அணியலாம். உத்தரியம் நீண்ட நாள் பயன்படுத்தப்படும்படியாக, (உலோகம் அல்லது ப்ளாஸ்டிக் போன்றவற்றால் ஆன) ஏதாவது ஒரு வகையான பைக்குள் வைத்து அதைப் பயன்படுத்தலாம். (ஆனால் பெரும்பாலும் இதைத் தவிர்ப்பது நல்லது.) ஆனால் இப்படிச் செய்யும்போது, கயிறுகள் கம்பளித் துண்டுகளோடு இணைக்கப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட வேண்டும். அப்போது தான் பை அகற்றப்படும்போதும், உத்தரியம் சிதைவடையாமல் இருக்கும்.

"செவ்வகக் கம்பளித் துணித் துண்டுகளின் நான்கு மூலைகளில் ஒன்றை (மேல் பக்க மூலை)

(உதாரணமாக, எதாவது ஒரு மூன்றாம் சபைக்குரிய) மற்றொரு உத்தரியத்தின் மேல் ஓரத்துடன் சேர்த்துத் தைப்பது அனுமதிக்கப்பட்டுள்ளது. அப்போது மட்டுமே ஒரே ஒரு ஜோடி கயிறுகள் தேவைப்படும். ஆனால் கயிறுகள் இரண்டு உத்தரியங்களுக்கும் நடுவில் வைத்துத் தைக்கப்பட வேண்டும், அப்போதுதான் அது இரண்டு உத்தரியங்களோடும் நேரடியாகச் சேர்த்துத் தைக்கப் பட முடியும்.''

உத்தரிய சபையில் சேர்வதற்கான ஒழுங்குகள்

உத்தரியத்தை மந்திரிப்பதும், உத்தரிய சபையில் ஒருவரைச் சேர்ப்பதும், உரிய அங்கீகாரம் பெற்ற ஒரு குருவானவரால் மட்டுமே செய்யப்பட வேண்டும். ஒரு முறை உத்தரிய சபையில் சேர்க்கப்பட்டு விட்டவர், தம் வாழ்நாள் முழுவதும் அதன் உறுப்பினராகவே நிலைத்திருக்கிறார்.

ஒருவருக்குரிய உத்தரியம் மந்திரிக்கப்படுவதும், அவர் உத்தரிய சபையில் சேர்க்கப்படுவதும் ஒரே குருவால் செய்யப்பட வேண்டும். அவர் ஒரே மந்திரிப்பின் மூலம் எத்தனை உத்தரியங்களை வேண்டுமானாலும் மந்திரிக்கலாம்.

ஒரு முறை உத்தரியம் மந்திரித்து அணிந்துகொண்டவர்கள் அடுத்தடுத்த உத்தரியங்கள் அணியும் ஒவ்வொரு முறையும் அதை மந்திரிக்க அவசியமில்லை.

தாம் உத்தரிய சபையில் சேர்க்கப்பட்ட முறை செல்லுமா என்று சந்தேகப்படுபவர், அந்தச் சந்தேகத்தின் பலனை அவரைச் சபையில் சேர்த்த குருவானவருக்கே தந்து விட வேண்டும். தமக்கு உத்தரியம் அணிவதற்கான எல்லா ஞானப் பலன்களும் தரப்பட்டுள்ளன என்று அவர் உறுதியாக நம்பலாம். தற்காலத்தில் இந்த அங்கீகாரமற்ற குருக்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே இருக்கிறார்கள். பெரும்பாலான மேற்றிராசனங்களில், பழுப்பு உத்தரியம் உட்பட, ஐந்து வகை யான உத்தரியங்களின் பக்த சபைகளில் உறுப்பினர்களைச் சேர்க்கும் அனுமதி, பொது அனுமதி களுடன் சேர்த்தே வழங்கப்பட்டு விடுகிறது. பல குருக்கள், பழுப்பு உத்தரிய சபையில் உறுப் பினர்களைச் சேர்க்கும் அங்கீகாரத்தைத் தங்கள் சலுகைகளில் ஒன்றாகக் கொண்டிருக்கிற, குருக்களுக்கான சபைகளின் உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள் (எ.கா.: குருநிலையினரின் வேதபோதக ஐக்கிய சபை). ஆகவே, ஒரு குருவானவர் உத்தரிய சபையில் ஒருவரைச் சேர்க்கும் போது, அந்த நபர் உத்தரிய பலன்களை இயல்பாகவே கொண்டிருக்கிறார் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். இனி, அது பற்றி எந்த சந்தேகத்திற்கும் அவர் இடம் தரக்கூடாது.

மேலும், செல்லுபடியற்ற சேர்க்கைகளை செல்லத்தக்கவையாக்குகிற ஒரு ''ஸானாத்ஸியோ'' (உறுதிப்படுத்தும் உத்தரவு - Sanatio) ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது.

உத்தரிய சபையில் சேர்க்கப்பட்டுள்ள நபரின் பெயர் ஒரு கார்மெல் உத்தரிய சபையிலோ அல்லது திருச்சபையால் ஏற்படுத்தப்பட்டுள்ள வேறு கார்மெல் உத்தரிய சபையிலோ பதிவு செய்யப்பட வேண்டும். ஆனாலும், பெயர்களை இவ்வாறு பதிவு செய்யாமலே ஆட்களைச் சேர்க்கும் சலுகையைப் பல குருக்கள் பெற்றிருக்கிறார்கள். உண்மையில், விசுவாசிகள் ஒரு குழுவாக உத்தரிய சபையில் சேர்க்கப்படும்போது, பெயர்கள் பதிவு செய்யப்பட வேண்டிய அவசியமில்லை என்பது பொது விதியாக இருக்கிறது.

போர்வீரர்களும், மாலுமிகளும், கப்பல் ஊழியர்களும் வெறுமனே, மந்திரிக்கப்பட்ட ஓர் உத்தரியத்தை அல்லது உத்தரிய சுரூபத்தை அணிந்துகொண்டு, மாதாவுக்குச் சில ஜெபங்களைச் சொல்வதன் மூலம் (உதாரணமாக, மூன்று முறை அருள்நிறை மந்திரம்) தங்களைத் தாங்களே

உத்தரிய சபையில் இணைத்துக்கொள்ளலாம். அவர்கள் ஏதாவது ஓர் உத்தரிய சபை ஆலயத்திற்கு, தங்கள் பெயர் சேர்க்கப்படும்படி தகவல் தர வேண்டியதில்லை. மாறாக, அவர்கள் தாங்களாகவே, முழுமையாகவும், நிரந்தரமாகவும் இச்சபையின் உறுப்பினர்களாகிறார்கள்.

குழந்தைகள் புத்தி விபரம் அடைவதற்கு முன்பே உத்தரிய சபையில் சேர்க்கப்படலாம். இந்தச் சேர்க்கை அவர்கள் புத்தி விபரம் அடைந்த பின்னும் செல்லத்தக்கதாக இருக்கிறது.

உத்தரிய சபையில் உறுப்பினராயிருப்பது, சிறிது நேரம் உத்தரியத்தை அணியாதிருப்பதால் நின்று விடுவதில்லை. ஒருவர் நீண்ட காலமாக உத்தரியம் அணியத் தவறியிருந்தாலும், அவர் மீண்டும் உத்தரிய சபையில் சேர வேண்டியதில்லை (உத்தரிய ஒழுங்குகள், கார்மேல் தேசிய திருத்தலம், 329E. 28th St. N.Y., New York).

கத்தோலிக்கரல்லாத ஒருவரும் கூட நம் திவ்ய ஆண்டவளின் இந்தப் பழுப்பு உத்தரியத்தை அணிந்து, கிறீஸ்துநாதரின் திருமாதாவின்மீது தங்களுக்குள்ள பக்தியின் இந்த விசேஷ வெளிப்பாட்டிற்காக, பல வரப்பிரசாதங்களையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், ஞானஸ்நானம் பெற்ற கத்தோலிக்கர்கள் மட்டுமே அதிகாரபூர்வமாக உத்தரிய சபையில் சேர்க்கப்பட முடியும். கிறீஸ்துநாதரின் திருமாதாவைக் கனப்படுத்த ஆவலாயிருக்கும் கத்தோலிக்கரல்லாத அனைவரும் உத்தரியம் அணியும்படி வற்புறுத்தப்பட வேண்டும்.

உத்தரியத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஞானப் பலன்கள்

அர்ப்பணம்

பழுப்பு உத்தரியத்தை நீங்கள் முத்தமிடும் ஒவ்வொரு முறையும் ஒரு பகுதிப் பலனைப் பெற்றுக்கொள்கிறீர்கள். உங்கள் உத்தரியம் மரியாயின் மாசற்ற இருதயத்தோடு நீங்கள் செய்து கொள்ளும் "ஒப்பந்தத்தின்" அடையாளமாக இருந்து, பாத்திமாவில் அவர்கள் கேட்டுக்கொண்ட காரியங்களை உங்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டே இருப்பதாக. அவை:

பரித்தியாகம்:

உங்கள் காலை அர்ப்பண ஜெபத்தை நாள் முழுவதும் பல முறை சொல்கிறீர்களா? (பின்வரும் காரியங்களுக்கு ஒரு பகுதிப் பலன் வழங்கப்பட்டுள்ளது:)

1. தன் கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றி, வாழ்வின் துன்ப துரிதங்களை அமைந்த மனதோடு தாங்கிக்கொண்டு மனதளவிலாவது, ஏதாவது பக்தியுள்ள மன்றாட்டை ஜெபிப்பதன் மூலம் கடவுளில் தாழ்ச்சியுள்ள நம்பிக்கை கொள்ளும்படி தன் மனதை உயர்த்தும் விசுவாசியும்;

2. விசுவாச உணர்வால் நடத்தப்பட்டு, ஏழைகளாகிய தனது சகோதரர்களுக்கு ஊழியம் செய்கிற அல்லது தன் பணம் அல்லது பொருளைக் கொண்டு அவர்களுக்கு இரக்கத்தோடு உதவி செய்கிற விசுவாசியும்;

3. தவ உணர்வோடு நியாயமானதும், தனக்குப் பிரியமானதுமான ஏதாவது ஒன்றைச் சுயாதீன மனதோடு விலக்கும் விசுவாசியும் இந்தப் பகுதிப் பலனைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

நாள் முழுவதும், வேலை அல்லது துன்பம் கடவுளுக்கு ஒப்புக்கொடுக்கப்படும்போது, நாம் ஜெபிக்கும்படி நம் பாத்திமா மாதா நமக்குத் தந்திருக்கிற ஓர் உத்தமமான ஜெபம்: **"ஓ என் சேசுவே, உமது அன்பிற்காகவும், பாவிகள் மனந்திரும்பவும், சேசு மரிய இருதயங்களுக்கு நிந்தைப் பரிகாரமாகவும் இதை ஒப்புக்கொடுக்கிறேன்"** என்பதாகும்.

ஜெபம்

அனுதினமும் ஐம்பத்து மூன்று மணி ஜெபமாலை சொல்கிறீர்களா? (பொதுவில் சொல்லப் படும்போது, ஒவ்வொரு நாளும் ஒரு முறை பரிபூரணப் பலன்).

பரிகாரம்

தொடர்ச்சியான ஐந்து மாதங்களின் முதல் சனிக்கிழமைகளில், முதல் சனி பக்தியைக் கடைப்பிடிக்க முயற்சி செய்திருக்கிறீர்களா?

(முதல் சனி பக்தியை அனுசரிப்பவர்களுக்கு நம் பரிசுத்த ஆண்டவள் தந்துள்ள வாக்குறுதி: **"அவர்களுடைய மரண நேரத்தில், இரட்சணியத்திற்கு அவசியமான சகல வரப்பிரசாதங்களையும் கொண்டு அவர்களுக்கு உதவுவதாக நான் வாக்களிக்கிறேன்."**

பீடத்தின் மகா பரிசுத்த தேவத்திரவிய அனுமானமாகிய திவ்ய நற்கருணையில் நம் ஆண்டவரைச் சந்தித்து ஆராதனை செய்கிறீர்களா? (திவ்ய நற்கருணைக்கு முன் குறைந்த பட்சம் அரை மணி நேரம் ஆராதனையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஒரு பரிபூரணப் பலன்.) முடிந்தால், ஒரு மணி நேரம் இதைச் செய்வது இன்னும் சிறந்தது. "ஒரு மணி நேரம் என்னோடு விழித்திருக்க உங்களால் கூடாமற்போயிற்றோ?" என்று அன்போடும், துயரத்தோடும் கேட்ட ஆண்டவரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வது, அன்பு மிகுந்த பரிகாரச் செயலாயிருக்கிறது.

சேசுக்நாதர் தமது மாசற்ற திருத்தாயாரின் கரங்களின் வழியாக, அவர்களோடு இணைந்து மனுக்குலத்தின் இரட்சணியத்திற்காக, தம் உயிரைத் தமது பிதாவாகிய சர்வேசுரனுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்தார் என்று, ஒவ்வொரு வருடமும் மகா பரிசுத்த கன்னி மாமரியின் சுத்திகரத் திருநாள் அன்று நமக்கு நினைவுபடுத்தப்படுகிறது. இதுதான் முதலாவது உத்தமமான காலை அர்ப்பணமாக இருந்தது. எல்லாக் கிறீஸ்தவர்களும் இதைக் கண்டுபாவிக்க முன்வருவார்களாக.

காலை அர்ப்பண ஜெபம்

"என் தேவனே, உலகெங்கிலுமுள்ள பலிபீடங்கள் அனைத்திலிருந்தும் சேசுவின் விலை மதிக்கப்படாத திரு இரத்தத்தையும், அதனோடு, இந்நாளில் என் ஒவ்வொரு சிந்தனை, சொல், செயலின் காணிக்கையையும், மரியாயின் மாசற்ற இருதயத்தின் ஐக்கியத்தில் (இங்கே உன் பழுப்பு உத்தரியத்தை முத்தமிடவும்) உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

ஓ என் சேசுவே, இன்று நான் சம்பாதிக்கக் கூடியதும், ஒப்புக்கொடுக்கக்கூடியதுமான ஒவ்வொரு ஞானப் பலனையும், பேறுபலனையும், அமலோற்பவ மாமரி உமது மகா பரிசுத்த திரு இருதயத்தின் விருப்பங்கள் நிறைவேறுமாறு உத்தமமான விதத்தில் அவற்றைப் பயன்படுத்தும் படியாக, அவை அனைத்தோடும் என்னையும் மாசற்ற கன்னி மாமரிக்கு ஒப்புக்கொடுக்குமாறு, அவற்றை இன்று அடியேன் சம்பாதிக்க விரும்புகிறேன்."

ரஷ்யா மனந்திரும்ப ஒரு நிபந்தனையாக, அனுதினக் கடமைகளை அர்ச்சிக்குமாறு பாத்திமா மாதா கேட்டுக்கொண்ட வேண்டுகோளை நிறைவேற்றும்படி, இந்த அர்ப்பண ஜெபம் உலகம் முழுவதும் நீலப் போரணியின் கோடிக்கணக்கான உறுப்பினர்களால் சொல்லப்பட்டு வந்தது.

"கத்தோலிக்கத் திருச்சபையின் போதக ஆசிரியத்தால் பல நூற்றாண்டுகளாகப் பரிந்துரைக் கப்பட்டு வந்துள்ள மகா பரிசுத்த கன்னிகையின்மீதான பக்தி முயற்சிகளை எப்போதும் மிக உயர்வாக மதித்து வாருங்கள். அவற்றிடையே குறிப்பாக மரியாயின் பரிசுத்த ஜெபமாலையும், கார்மெல் உத்தரியத்தின் பயன்பாடும் முக்கியமானவை" **- பாப்பரசர் ஆறாம் சின்னப்பர்.**

பரிசுத்த உத்தரியத்தின் வழியாக நடந்த புதுமை

கப்பல் கடும் புயலின் ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்ட புதுமை

★ *1845-ஆம் ஆண்டில், "கடல் அரசன்" என்ற ஆங்கிலேயக் கப்பல் ஒரு பயங்கரமான சூறாவளியில் சிக்கிக்கொண்டது. காற்றும், கடலும் அதை ஒரு விளையாட்டுப் பொருள் போல இரக்கமின்றித் தூக்கியெறிந்து விளையாடிக்கொண்டிருந்தன. அந்தக் கப்பலில் ஒரு பதித சபைப் போதகரும் குடும்பத்துடன் பயணம் செய்துகொண்டிருந்தார். தங்கள் மரணம் மிக அண்மையில் வந்துவிட்டதாக உணர்ந்த அவர் மிகுந்த போராட்டத்தின் பின் கப்பலின் மேல்தளத்திற்கு வந்து, தேவ இரக்கத்திற்காகவும், மன்னிப்பிற்காகவும் ஜெபிக்கத் தொடங்கினார்.*

அந்தக் கப்பலின் ஊழியர்களில் ஜான் மெக்காலிஃப் என்னும் அயர்லாந்தைச் சேர்ந்த ஓர் இளைஞன் இருந்தான். அவன் சூழ்நிலையின் விபரீதத்தை முழுமையாக உணர்ந்து, தன் கழுத்தில் அணிந்திருந்த கார்மெல் உத்தரியத்தைக் கழற்றி, அதைக் கொண்டு கொந்தளித்துக்கொண்டிருந்த கடல் அலைகளின்மீது சிலுவை அடையாளம் வரைந்து, அதைக் கடலின்மீது வீசியெறிந்தான். அதே கணத்தில் காற்று அமர்ந்தது. ஒரே ஒரு பெரிய அலை மட்டும் கப்பலின் மேற்தளத்தைக் குளிப்பாட்டி விட்டுக் கடந்து செல்ல, அவன், தான் கடலில் வீசியெறிந்த உத்தரியம் தன் பாதங்களின் அருகில் கிடப்பதைக் கண்டு, வாக்குக்கெட்டாத மகிழ்ச்சியோடு சேசுவுக்கும், தனது பிரியமுள்ள திவ்ய அன்னைக்கும், அவர்களது கட்டளையின்பேரில் உத்தரியத்தைத் தன்னிடம் கொண்டு வந்து சேர்த்த அந்த அலைக்கும் நன்றி செலுத்திவிட்டு, அதை மீண்டும் அணிந்துகொண்டான்.

இவ்வளவு நேரமும் தம் "ஜெபத்தை" நிறுத்தி விட்டு, இந்த இளைஞன் செய்த அனைத்தையும் கவனித்துக்கொண்டிருந்த (திரு ஃபிஷர் என்னும்) அந்தப் பதித போதகர் மிகுந்த அதிசயத்திற்கு உள்ளானவராக இளைஞனை நெருங்கி வந்து, அவன் என்ன செய்து இந்தக் காற்றையும், கடலையும் அமர்த்தினான் என்று அவனிடம் கேட்டார். இளைஞன் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, மகா பரிசுத்த கன்னிகையினுடையவும், அவர்களுடைய பரிசுத்த உத்தரியத்தினுடையவும் வல்லமையைப் பற்றி அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும், மற்ற பயணிகளுக்கும் எடுத்துரைத்தான். அவன் கூறிய காரியங்கள் எந்த அளவுக்கு அவர்களை மனம் மாற்றின என்றால், திரு ஃபிஷரும், அவருடைய குடும்பத்தாரும் அந்தக் கணமே கத்தோலிக்கத் திருச்சபையாகிய பரிசுத்த தாய்க்குத் தாங்கள் பிள்ளைகள் ஆவது என்று தீர்மானித்தார்கள். நம் பரிசுத்த அன்னையின் உத்தரியம் அன்று அவர்களுடைய உயிர்களை மட்டுமின்றி, அவர்களுடைய ஆத்துமங்களையும் காப்பாற்றும் வரப்பிரசாதக் கருவியாக ஆனது!

(குளிக்கிற நேரம் தவிர, வேறு) எந்தச் சமயத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் நாம் உத்தரியத்தைக் கழற்ற வேண்டிய அவசியமேயில்லை. தங்க நகைகளை விடவும் வைர, வைடூரியங்களால் அலங்கரிக்கப்பட்ட ஆபரணங்களை விடவும் எவ்வளவோ அதிக மதிப்புள்ளதாயிருக்கிற உத்தரியத்தை அணிந்திருப்பதில் பெருமை கொள்வோம். இவ்வாறு நாம் நம் கத்தோலிக்க விசுவாசத்தையும், தேவ அன்னையின்மீது நமக்குள்ள பிள்ளைகளுக்குரிய அன்பையும் அறிக்கையிடுகிறோம். அவர்களுடைய வல்லமையுள்ள பாதுகாவலின் கீழ் உலகம், சரீரம், பசாசு என்னும் ஆபத்துக்களிலிருந்து எப்போதும் பாதுகாக்கப்படுகிறோம்!

உத்தரிய சபையில் சேர்வதற்கான சுருக்கமான சடங்கு முறை

(கத்தோலிக்க முறைப்படி பட்டம் பெற்ற குருவானவர் சர்ப்ளிஸ், வெள்ளை ஸ்தோலா அணிந்திருக்கிறார். உத்தரிய சபையில் சேருகிறவர்கள் முழங்காலில் இருக்கிறார்கள். முதலில்

உத்தரியங்களை மந்திரித்தல்:)

குரு: ஆண்டவரே, உமது இரக்கத்தை எங்களுக்குக் காண்பித்தருளும்.

பதில்: உமது இரட்சணியத்தையும் எங்களுக்குத் தந்தருளும்.

குரு: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

பதில்: என் அபய சத்தம் உமது சன்னதி மட்டும் வரக்கடவது.

குரு: ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

பதில்: உமது ஆவியோடும் இருப்பாராக.

ஜெபிப்போமாக

ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துவே! மனுக்குலத்தின் இரட்சகரே! உமது ஊழியன் (ஊழியர்கள்) உம்முடையவும், உமது கன்னித் தாயாரான மரியாயுடையவும் அன்பிற்காக அணியப் போகும் இந்த உத்தரிய ஆடையை உமது வலது கரத்தால் + அர்ச்சித்தருளும். அதனால் இவர் (இவர்கள்) அதே தேவ தாயாரின் மன்றாட்டால் தீய எதிரியிடமிருந்து காப்பாற்றப்பட்டு மரண மட்டும் உமது வரப்பிரசாதத்தில் நிலைத்திருப்பாராக (நிலைத்திருப்பார்களாக). என்றென்றும் ஜீவியரும், இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற ஆண்டவரே. பதில்: ஆமென்.

(பின் உத்தரியங்களின்மீது தீர்த்தம் தெளிக்கிறார். அதன்பின் உத்தரியத்தை ஒவ்வொருவருக்கும் தனித்தனியே கீழ்வரும் ஜெபத்தைச் சொல்லி அணிவிக்கிறார்:)

மிகப் பரிசுத்த கன்னிகையை மன்றாடியபடி இந்த ஆடையை அணிந்துகொள்வீர். அதனால் இதை அவ்வன்னையின் பேறுபலன்களால் மாசுபடாமல் தரித்திருப்பீராக. அவ்வன்னையே உம்மை (உங்களை) எல்லாக் கேட்டினின்றும் காப்பாற்றி, நித்திய வாழ்வுக்கு வழிநடத்துவார்களாக.

(இதன்பின் உத்தரியம் அணிவிக்கப்படுகிறது. குருவானவர் ஒவ்வொருவருக்கும் அணிவிக்கிறார்.)

எனக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின்படி உம்மை (உங்களை) சேசுக்கிறீஸ்துவின் இரக்கத்தின் துணையோடு கார்மெல் மலை சபையார் பெறும் எல்லா ஞானப் பலன்களிலும் பங்காளியாக இருக்கும்படி ஏற்றுக்கொள்கிறேன். பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்துவின் பெயராலே. ஆமென்.

பரிசுத்த கன்னிமாமரியின் கார்மெல் மலைச் சபையில் உம்மை (உங்களை) ஏற்றுக்கொள்ளத் திருவுளமான பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த எல்லாம் வல்ல சர்வேசுரன் உம்மை (உங்களை) ஆசீர்வதிப்பாராக. உம்முடைய (உங்களுடைய) மரண சமயத்தில் அவ்வன்னை ஆதிப் பாம்பின் தலையை நசுக்கி, வெற்றிக் குருத்தையும், நித்திய வாழ்வின் மகுடத்தையும் நீர் (நீங்கள்) பெற்றுக்கொள்ளச் செயள்வார்களாக. நமதாண்டவராகிய கிறீஸ்துவின் வழியாக - ஆமென்.

(உத்தரியம் பெற்றுக்கொண்டவர்கள் மேல் குருவானவர் தீர்த்தம் தெளிக்கிறார்.)

உத்தரிய மாதாவுக்கு ஜெபம்

ஓ கார்மெல் மலை அன்னையே! என் கடைசி நேரம் வந்து, உமது புனித உத்தரியத்தை என் நடுங்கும் கரங்களில் நான் ஏந்தும்போது, என் இருதயத்தை உம்மீதுள்ள நம்பிக்கையால் நிரப்பி, என் ஆத்துமத்தை ஏற்றுக்கொண்டு, சேசுவின் திரு இருதயத்திடம், என் அன்புள்ள தாயே, அதை ஒப்படைப்பீர்களாக. ஆமென்.

பரிசுத்த கார்மெல் மலை மாதா திருநாள்: ஜூலை 16.

பரிசுத்த கார்மெல் மலை மாதாவே, எங்கள் இரட்சணியமாயிரும்!

அறிந்துகொள்வோம் பாத்திமா செய்தியை!

சம்மனசானவரின் காட்சிகள்

1915-ம் ஆண்டு. கபேசோவில் ஆடு மேய்த்து வந்த லூஸியாவும் அவள் தோழிகளும் பகல் உணவு அருந்தியபின் ஜெபமாலை சொல்வது வழக்கம். ஒருநாள் அவர்கள் ஜெபமாலை ஜெபிக் கையில், கீழேயிருந்த பள்ளத்தாக்கின் மேலே, மிக உயரத்தில் வெள்ளை நிறமான ஒன்று தங்களை நோக்கி வருவதை அவர்கள் கண்டனர். அது சிறுமிகளுக்கு நேராக வந்து சில மரங்களுக்கு நேரே ஆகாயத்தில் அப்படியே நின்றது. சிறுமிகள் தொடர்ந்து ஜெபமாலை சொல்லி முடிக்கவும் அது சூரிய வெளிச்சத்தில் காற்றுடன் கலந்து மறைந்து விட்டது. ''சுரூபம் போல் ஒரு உருவம்; வெண்பனியால் செய்யப்பட்டுப் போர்வை போர்த்தியது போலிருந்தது; சூரிய ஒளி பட்டதால், ஊடுருவிப் பார்க்க முடிந்தது.'' லூஸியாவின் மனதில் அவ்வுருவம் இவ்வாறு பதிந்துள்ளது.

சம்மனசானவரின் முதல் காட்சி



ஒருநாள் பாத்திமா குழந்தைகளான லூசியா, பிரான் சிஸ், ஜசிந்தா மூவரும், அல்யுஸ்திரலுக்குச் சற்று மேற்கே கபேசோவுக்கு அருகில் கௌஸா வெல்லா என்ற இடத்திற்கு ஆடுகளை ஓட்டிச் சென்றனர். திடீரென வானம் கறுத்து, கனத்த மழைக்கு ஆயத்தமாயிற்று. பாதுகாப்புக்காக சிறுவர் மூவரும் கபேசோ நோக்கி ஆடுகளை ஓட்டிச் சென்று, சில மரங்களுக்கடியில் அவற்றை நிறுத்திவிட்டு, சிறு குகை ஒன்றில் ஒதுங்கினார்கள். பகல் உணவை அருந்திவிட்டு அவர்கள் முழங்காலிட்டு ஜெபமாலை ஜெபித்தார்கள். செபமாலை முடியவும் மழைத் தூறல் நின்றது. திடீரென பலத்த காற்று வீசியது. சிறுவர் மூவரும் திடீரென அம்மரங்களுக்கு மேல் உயரத்தில் ஒளியாலான ஓர் உருவத்தைக் கண்டனர்! வெண்பனியிலும் அதிக வெண்மையாக இருந்த அது குழந்தைகளுக்கு மிக அருகில் வந்து நின்றது. ''ஒளி ஊடுருவிப் பாயும் படிகம் போல் ஓர் இளைஞர் தோன்றியது போலிருந்தது'' என்கிறாள் லூஸியா. மனித உருவில் விவரிக்க முடியாத அழகோடு இருந்த அவருக்கு 14 முதல் 16 வயதுக்குள் இருக்கும்.

இளைஞர் பேசினார். ''அஞ்சாதீர்கள். நான் சமாதானத் தூதன். என்னுடன் ஜெபியுங்கள்'' என்றார்! அதன்பின் முழந்தாளிட்டு நெற்றி தரையில்பட பணிந்து: **''என் தேவனே! உம்மை விசுவசிக்கிறேன், உம்மை ஆராதிக்கிறேன், உம்மை நம்புகிறேன், உம்மை நேசிக்கிறேன். உம்மை விசுவசியாதவர்களுக்காகவும், உம்மை ஆராதியாதவர்களுக்காகவும், உம்மை நம்பாதவர்களுக்காகவும், உம்மை நேசியாதவர்களுக்காகவும் மன்னிப்புக் கேட்கிறேன்''** *என்று ஜெபித்தார். பின் எழுந்து, ''இவ்வாறு ஜெபியுங்கள்.* **நீங்கள் மன்றாடும் குரலை சேசு மரியாயின் இருதயங்கள் செவியுற்றுக் கேட்கிறார்கள்**'' *என்று சொல்லி மறைந்து விட்டார்.*

பாத்திமா காட்சிகளையும், செய்திகளையும் சிந்திக்கும்போது, அவை நிகழ்காலமாகிய 1917-ஆம் ஆண்டோடு தொடர்புள்ளதாக இருப்பதை விட, எதிர்காலத்தோடும், நாம் வாழும் இந்த இறுதிக் காலங்களோடுமே அதிகத் தொடர்புள்ளவையாக இருக்கின்றன என்பதை நாம் மனதில் இருத்திக் கொள்வது அவசியம்.

உம்மை ஆராதிக்கிறேன்: *தேவ திருச்சுதனின் மனிதாவதாரத்தின் முதல் நோக்கம், அவர் சர்வ வல்லபரான மகா பரிசுத்த தமத்திரித்துவ சர்வேசுரனுக்குத் தகுதியுள்ள ஆராதனையும்,*

மகிமையும், நன்றியறிதலும் செலுத்துவதும், மனிதர்கள் அவருடைய ஆராதனை, மகிமை, நன்றியறிதலுடன் தங்கள் சொந்த ஆராதனை, மகிமை, நன்றியறிதலை ஒன்றித்துக் கடவுளுக்கு ஒப்புக் கொடுக்கும்போது, அவை அவருக்குத் தகுதியுள்ளவையாக ஆக்கப்படுவதுமே ஆகும். திவ்ய பலிபூசையில் நிகழ்வது இதுதான். கடவுள் சிருஷ்டிகளைப் படைத்ததன் நோக்கமும் இவைதான்.

எனவே, பாத்திமா காட்சிகளின் முதல் தேவையாகிய தேவ ஆராதனை இங்கே சம்மனசானவரால் தேவமாதாவின் "சிறிய" பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்படுகிறது. திவ்ய நற்கருணைப் பலியில் ஞாயிறுகளில் மட்டுமின்றி, முடிந்த வரை, அனுதினமும் பங்கு பெற்று, அடிக்கடி திவ்ய நன்மை வாங்குவதன் மூலமாகவும், தேவ நற்கருணைப் பேழைகளில் கைவிடப்பட்டிருக்கிற நம் ஆண்டவரை அடிக்கடி சந்தித்து, அவரோடு தங்கியிருப்பதாலும், சேசுவின் திரு இருதய பக்தியை அனுசரிப்பதாலும் இந்த தேவ ஆராதனையை விசேஷமான முறையில் கடவுளுக்குச் செலுத்த மாசற்ற கன்னிகையின் சிறு பிள்ளைகளாகிய நாம் அழைக்கப்படுகிறோம்.

உம்மை விசுவசிக்கிறேன்: திவ்ய பலிபூசை அகற்றப்பட்டு, அதன் இடத்தில் அருவருப்புக் குரிய நாசம் நிறுவப்பட்டு 55 ஆண்டுகளாயிற்று. வழிபாடு பதித, பிரிவினை சபைகளின் வழிபாட்டுக்கு இணையானதாக மாற்றப்பட்டுவிட்டது. "ஞானத்திலும், சத்தியத்திலும்" (அரு. 4:24), அமைதியிலும், மனதுருக்கத்திலும் ஆராதிக்கப்பட வேண்டியவருக்கு முன்பாக, இன்று மக்களோடு சேர்ந்து குருக்களும் உலகத் தன்மையான இசைகளுக்கு, இச்சைக்குரிய விதத்தில் நடனமாடி அவரை "ஆராதிக்கிறார்கள்." மெய்யான கத்தோலிக்க ஞான உபதேசத்தின் இடத்தை நவீனப் பதிதத்தை அடிப்படையாகக் கொண்ட (சத்தியத்தை) மறைக்(கிற) கல்வியும், அதிகார பூர்வமான வுல்காத்தா வேதாகமத்தின் இடத்தை சகல தப்பறைகளும் நிறைந்த திருவிவிலியமும் ஆக்கிரமித்துள்ளன. குருமடங்கள் அர்ச். தாமஸ் அக்குயினாஸின் போதனைகளுக்குப் பதிலாக, நவீனவாத அஞ்ஞானப் பயிற்சி தந்து, "அருட்பணியாளர்களை" உருவாக்குகின்றன. இவர்கள் மக்களின் கொஞ்சநஞ்ச விசுவாசத்தையும் முழுவதும் அழிக்கும்படி மனிதப் பணியாற்றுகிறார்கள். இன்று மறுதலிக்கப்படாத சத்தியமில்லை, மாற்றப்படாத தேவத்திரவிய அனுமானங்களுமில்லை.

இந்த பயங்கர விசுவாச மறுதலிப்பின் காலத்தில், 2,000 வருட காலக் கத்தோலிக்கப் பாரம்பரியத்தின் ஒவ்வொரு சத்தியத்தையும், அதன் கம்பீரமானதும், மிக அழகானதும், அமைதியும், பக்தியும் நிறைந்ததும், கடவுள்தாமே தம் திருச்சபையின் வழியாக ஏற்படுத்தித் தந்துள்ளதுமான தேவ வழிபாட்டையும் முழுமையாக அங்கீகரித்து ஏற்றுக்கொண்டு, அவற்றின்படி பரிசுத்தமாக வாழ தேவமாதாவின் "சிறு பிள்ளைகள்" அழைக்கப்படுகிறார்கள். பரிசுத்த, அப்போஸ்தலிக்க சத்தியத்தை இறுகப் பற்றிக்கொண்டு, கடவுளுக்குச் சித்தமானால் அதற்கு சாட்சியமாக இரத்தஞ் சிந்தவும் தயாராயிருக்கும்படி அழைக்கப்படுகிறார்கள். இதை ஏற்றுக்கொள்ளும்போதுதான் "உம்மை விசுவசிக்கிறேன்" என்ற இந்த வார்த்தைகளை நாம் உண்மையாகவே சொல்ல முடியும்.

உம்மை நம்புகிறேன்: விசுவாசத்திலிருந்து எழுவது தேவ நம்பிக்கை. தேவ திருச்சுதன் நம்மை மீட்டு இரட்சிப்பதற்காகவே இவ்வுலகிற்கு வந்தார். தம்மை விசுவசித்து, தமது தேவ பலத்தின் உதவியோடு பரிசுத்தமாக வாழப் போராடி அதில் வெற்றி பெறும் ஒவ்வொருவருக்கும் பிதா வானவர் "சேசுநாதருடைய திரு இரத்தப் பலன்களைப் பார்த்து, நம் பாவங்களையெல்லாம் பொறுத்து, நமக்குத் தமது வரப்பிரசாதங்களையும், மோட்ச பாக்கியத்தையும் தந்தருளுவார்" என்று நாம் உறுதியாக நம்பியிருக்க இவ்வாக்கியத்தால் நாம் அழைக்கப்படுகிறோம். இவ்வார்த்தைகளை உச்சரிக்கும்போது, இந்த தேவ நம்பிக்கையையே நாம் வெளிப்படுத்துகிறோம்.

உலக செல்வத்தையும், உயர் ஸ்தானங்களையும் கடவுள் வாக்களிக்கவில்லை. நம் இரட்சணியத்திற்கு அவசியமானவற்றை அவர் உறுதியாக வாக்களிப்பதோடு, தமது இராச்சியத்தையும்,

நீதியையும் தேடுபவர்களுக்கு, அவசியமான உலக நன்மைகளையும் அவர் வாக்களிக்கிறார். ஆயினும், "தமக்குச் சீடர்களாக இருக்க விரும்புகிறவர்கள் தங்களை மறுத்துத் தங்கள் சிலுவையை நாள்தோறும் சுமந்துகொண்டு, தம்மைப் பின்செல்ல வேண்டும்" என்று அவர் எதிர்பார்க்கிறார். எனவே, உலக செல்வங்களுக்காகக் கடவுளை நம்பியிருக்கும் ப்ரொட்டஸ்டாண்ட் மனநிலையை வெறுத்துத் தள்ளி, கடவுள் அனுப்புகிற உண்மையான செல்வங்களான துன்பங்களை அமைந்த மனதோடு ஏற்றுக்கொண்டு, பாக்கியமான மரணத்தையும், நித்தியப் பேரின்ப பாக்கியத்தையும் ஏக்கத்தோடு எதிர்நோக்கியிருக்க நமக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

உம்மை நேசிக்கிறேன்: "சர்வேசுரன் உலகத்தை எவ்வளவாக நேசித்தாரென்றால் தமது ஏக சுதனைத் தந்து, அவர்மேல் விசுவாசமாயிருக்கிற எவனும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படி அருளியிருக்கிறார்" (அரு. 3:16). நம்மை இரட்சிக்க வந்த தேவ திருச்சுதனோ, "இவ்வுலகத்திலே இருந்த தம்முடையவர்களைத் தாம் சிநேகித்திருக்கையில் அவர்களை முடிவு வரை சிநேகித்தார்" (அரு.13:1). மூவுலகங்களிலும் அடங்காதவர், ஒரு மாசற்ற கன்னிகையின் திருவுதரத்திலும், ஆறடிச் சரீரத்திலும் அடங்கியிருந்து, மூவுலகத்தாரும் மண்டியிடத் தகுதியுள்ள மகிமை மிகுந்த தேவனாயிருந்தும், மனிதர் கரங்களால் கொல்லப்படும் அளவுக்கு நம்மை நேசித்தார். ஆ, மெய்யாகவே நம் ஆண்டவர் நம் பரிபூரண சிநேகத்திற்குப் பாத்திரவானாயிருக்கிறார்!

ஆனால் உலகம் காரணமின்றி அவரைப் பகைக்கிறது. அவரோ ஏக்கத்தோடு நம்மிடம் திரும்பி, தம்மை நேசிக்கும்படி நம்மிடம் கெஞ்சுவதைப் பாருங்கள்: "ஒரு மணி நேரம் என்னோடு விழித்திருக்க உங்களால் கூடாமற் போயிற்றோ?" (மத். 26:40); "மனிதர்களை எவ்வளவோ அதிகமாக நேசித்த என் இருதயத்தைப் பார்! பதிலுக்கு அது பெறுவதெல்லாம் நன்றியற்றதனம் மட்டுமே... நீயாவது எனக்கு ஆறுதலளிக்க முயற்சியெடு!" என்று அவர் முறையிடுகிறார்.

இதில் ஆச்சரியம் என்னவென்றால், அவர் இந்த நேசத்தை நம்மிடம் இலவசமாகக் கேட்கவில்லை என்பதுதான்! நம்மிடம் எந்தத் தகுதியுமின்றி, தமக்கு எந்தப் பலனுமின்றி, அவர் நம்மை அளவுகடந்த விதமாய் நேசித்தார். ஆனால் தம்மை நேசிப்பவர்களுக்கோ, "கண்கள் கண்டிராததையும், காதுகள் கேட்டிராததையும், மனித இருதயத்திற்கு எட்டியிராததையுமான" அளவற்ற பரலோக இன்பங்களை அவர் வாக்களிக்கிறார். ஆகவே, அவர் கேட்கிற இந்த நேசமாகிய அற்ப விலையை அவருக்குத் தந்து, பதிலுக்கு, விலைமதிக்கப்படாத பரலோகப் பொக்கிஷத்தை, அந்த விலையேறப்பெற்ற முத்தை நாம் வாங்கிக்கொள்வோம். அவரை நேசிப்பதற்கு நாம் செய்ய வேண்டியதெல்லாம்: "என்னை நேசிக்கிறவன் என் கட்டளைகளைக் கடைப்பிடிக்கிறான்" என்னும் நம் ஆண்டவரின் படிப்பினையின்படி, அவற்றைக் கடைப்பிடிப்பது மட்டுமே.

இறுதியாக, சகோதரரே, தேவ ஆராதனையும், தேவ விசுவாசமும், தேவ நம்பிக்கையும், தேவ சிநேகமும் நிறைந்த நம் ஜெபங்களை சேசு, மரியாயின் இருதயங்கள் செவியுற்றுக் கேட்கிறார்கள் என்பது எவ்வளவு மகிழ்ச்சியான செய்தி! நம் ஜெபங்கள் சேசுவாலும், மாதாவாலும் ஏக்கத்தோடு எதிர்பார்க்கப்படுகின்றன, அவர்களால் வரவேற்கப்படுகின்றன. அவை, அவர்களுக்கு ஆறுதல் தந்து, அதன் மூலம் ஏராளமான ஆத்துமங்கள் இரட்சிக்கப்படக் காரணமாக இருக்கின்றன. இவ்வாறு, சேசு, மரியாயின் அன்பும், பலமும் மிக்க உதவியோடு, சிறிய ஆத்துமங்கள் கடவுளை விசுவசித்து, அவரை ஆராதித்து, அவரை நம்பியிருந்து, அவரை நேசிக்கும்படியாக, அவற்றை மனந்திருப்பும் "சிறிய இரட்சகர்களாக" இருக்க அழைக்கப்படுகின்றன.

நம் பாத்திமா திருயாத்திரை தொடரும்.

பரிசுத்த பாத்திமா ஜெபமாலை மாதாவே, வாழ்க!

மோட்சத்தின் திறவுகோலாகிய பிறர்சிநேகம்

"நீங்கள் ஒருவரை ஒருவர் சிநேகிக்கும்படியாக, நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளை கொடுக்கிறேன். நான் உங்களை சிநேகித்தது போல, நீங்களும் ஒருவர் ஒருவரை சிநேகிக்கக் கடவீர்கள்" *(அரு.13:34).*

பொறாமை – பழிவாங்குதல் ✠ இரக்கம்

சிநேகத்தின் ஒரு பகுதியான இரக்கம் ஒவ்வொரு மனிதனிடத்திலும் இருக்க வேண்டும். விசேஷமாய்க் கிறீஸ்தவர்களிடம் இது மிக அதிகமாக இருக்க வேண்டும். ஆனால் நம்மிடையே நமக்குப் பிடிக்காதவர்களைப் பழிவாங்கும் குணம், குறிப்பாக, உலக அதிகாரம் உள்ளவர்களிடத்திலும், ஞான அதிகாரிகளிடத்திலும், துறவற மடங்களிலும் அதிகமாக உள்ளது.

காரணம், நம்மிடையே சிநேகமில்லை, அல்லது அது நம்மிடம் முழுமையாக இல்லை. சிநேகம் இருப்பவர்களிடம் இப்படிப்பட்ட துர்க்குணங்கள் இருக்காது. **ஏனெனில், எங்கே அன்பு உள்ளதோ, அங்கே கடவுள் இருக்கிறார்.**

பழைய ஏற்பாட்டில்: *ஆதிப் பெற்றோரின் முதல் மகனான காயீன் தன் தம்பி ஆபேலின் மேலிருந்த பொறாமையால் அவனைக் கொன்றான். காரணம், ஆபேல் கடவுளுக்குப் பிரியமாக நடந்ததாலும், அவருக்குப் பிரியமான பலி செலுத்தியதாலும், ஆண்டவர் அவனது பலியை ஏற்றுக்கொண்டார். காயீன் கடவுளுக்குப் பிரியமற்றவனாக நடந்ததாலும், அவருக்குப் பிரியமில்லாததைச் செய்ததாலும், ஆண்டவர் அவனது பலியை ஏற்கவில்லை. இதனாலேயே அவன் தன் தம்பி ஆபேலைக் கொன்றான். காயீனுக்கு எதிராக ஆபேலின் இரத்தம் ஆண்டவரை நோக்கி முறையிட்டது.*





இரபேக்காளின் இளைய மகனான யாக்கோபு தன் தாய்க்குப் பிரியமாய் நடந்ததால் கடவுளின் திட்டப்படி மூத்தவனானான். ஏசாவுக்குப் போக வேண்டிய ஆசீர்வாதத்தைத் தான் பெற்றுக் கொண்டான். தனக்குக் கிடைக்க வேண்டிய ஆசீர்வாதத்தை யாக்கோபு பெற்றுக்கொண்டதால், ஏசாயு அவன்மீது மிகுந்த பொறாமை கொண்டான்.

புதிய ஏற்பாட்டில்: *நமது ஆண்டவரின் மீதிருந்த பொறாமையால் யூத குருக்கள் அவரைக் கொலை செய்யத் தீர்மானித்தார்கள். சேசுநாதரின் வேதத்தைப் போதிக்கக் கூடாதென்று அர்ச். சின்னப்பரை வாரினால் அடித்துத் துன்புறுத்தியும், அவர் அதைக் கேட்காததினாலே அவரைக் கொலை செய்யப் பல தடவைகள் முயற்சித்தார்கள். ஏன் இந்தப் பொறாமை? என் இந்தப் பழிவாங்குதல்?*

நமது மனித சுபாவம் ஜென்மப் பாவத்தாலும், கர்மப் பாவங்களாலும் கறைபட்டிருக்கிறது. நாம் புத்தி, அறிவில் வளர்ந்தாலும், அவை சுபாவத்திற்கு மேலான நோக்கமின்றி இருக்கும்போது, அதாவது, நாம் செய்யும் எதுவும் கடவுளுக்காக என்ற எண்ணம் நம்மிடம் இல்லாதிருக்கும் போது, நாம் சாத்தானின் சோதனைக்குள் எளிதாக சிக்கிக்கொள்கிறோம். இதனால்தான் நமக்குத் தீமை செய்தவர்களை நாம் கடவுளின் பெயரால் பொறுப்பதற்குப் பதிலாக, அவர்கள் மேல் வன்ம, வைராக்கியம், கோபம், பொறாமை, முடிவில் பழிவாங்குதல் வரை துணிந்துவிடுகிறோம். சில நேரங்களில் கடவுளின் நன்மைத் தனத்தை முன்னிட்டு, நன்மை மட்டும் செய்பவர்கள் பேரில் அநேகருக்குக் கோபம், பொறாமை ஏற்பட்டு, முடிவில் பழிவாங்குதல் வரை செல்கிறது.



காரணம், இவர்கள் அவர்களைப் போல நன்மையானதொன்றும் செய்ய விரும்புவதில்லை, அல்லது தங்கள் அந்தஸ்துக்கு ஏற்றபடி கடவுளுக்குப் பிரியமில்லாமல் வாழ்ந்திருப்பார்கள்.

பொறாமை, பழிவாங்குதல் ஆகியவை எல்லாக் காலத்திலும் பொதுவாக இருந்துள்ளன. இந்த நவீன காலத்தில் மனிதன் கடவுள் மேல் உள்ள தன் விசுவாசத்தையும், நேசத்தையும் இழந்ததினால், கூடுதலாக இந்தப் பாவத்தில் வாழ்கிறான். காரணம், சுவிசேஷம் போதிக்கப் படுகிறது, வாசிக்கப்படுகிறது, அல்லது கேட்கப்படுகிறது, ஆனால் வாழப்படுவதில்லை.

சிலர் மற்றவர்களைப் பழிவாங்குவதில் இன்பம் காண்பார்கள். அவர்கள் துன்பப்பட்டால் அவர்கள் சந்தோஷப்படுவார்கள் (sadists). இந்தத் துர்க்குணம் மகா பெரிய பாவம். சாத்தானின் நரகத் தந்திரங்களில் இது பெரியது. இப்படிப்பட்டவர்கள் மனந்திரும்பி மோட்சம் செல்வது மிகக் கடினம்.

இதற்காகத்தான் நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் நம் மீட்பிற்காகத் தாம் பட்ட பாடுகள், நிந்தை அவமானங்கள், வேதனைகள் அனைத்தையும் தாங்கிக்கொண்டார். நம் இரட்சகர் காட்டிய அதே பாதையில் நாமும் முழு மனதுடனும், முழு அன்புடனும் பின்சென்று, மோட்சத்தை அடையக் கடும் முயற்சி செய்வோமாக.

பழிவாங்கும் குணத்திற்கான தீர்வு

இரக்கம் காட்டுங்கள்; ஏழைகள் பேரிலும், அயலார் பேரிலும், உறவினர்கள், நண்பர்கள் பேரிலும் மட்டுமின்றி, கடவுளின் திருப்பெயரால் உங்கள் எதிரிகள் பேரிலும் இரக்கம் காட்டுங்கள். இதைத்தான் நம் ஆண்டவர் மிகத் தெளிவாகவும், அன்பாகவும் போதித்திருக்கிறார்.

"இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவார்கள்" (மத். 5:7).

"நான் உங்களுக்குச் சொல்கிறேன். உங்கள் சத்துராதிகளை நேசியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்காகவும், உங்கள் பேரில் அபாண்டஞ்சொல்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள்" (மத்.6:43).

அன்பிற்குப் பதில் அன்பு! வெறுப்புக்குப் பதில் அன்பு! பகைமைக்குப் பதில் அன்பு!

உங்களுக்கு நன்மை செய்ய முடியவில்லையா? குறைந்த பட்சம் தீமையாவது செய்யாதிருங்கள்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

33 நாள் தயாரிப்பு

அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட் முறைப்படி, மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு முழு அர்ப்பண பக்தி 33 நாள் தயாரிப்பு ஆகும். இதன்படி இந்தத் தயாரிப்பு ஜூலை 13 அன்று தொடங்கி, ஆகஸ்ட் 14-ல் முடிவடையும். மறு நாளாகிய தேவமாதாவின் பரலோக ஆரோபணத் திருநாளில் முழு அர்ப்பணம் செய்யப்பட வேண்டும். எனவே இதுவரையிலும் முழு அர்ப்பணத்தைச் செய்யாதவர்கள் பக்தியோடு அதைச் செய்யும்படியும், ஏற்கெனவே செய்தவர்கள் அதைப் புதுப்பித்துக் கொள்ளும்படியும் கேட்டுக் கொள்கிறோம்.

புதிதாக 33 நாள் தயாரிப்பு செய்கிறவர்களுக்குப் புத்தகங்கள் இலவசமாக அனுப்பி வைக்கப்படுகின்றன. உங்கள் முகவரிகளை அனுப்பி அவற்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

தபால், கொரியர் செலவு தனி.

சூசையப்பரின் குழந்தைப் பருவம்

கன்னிகையான மரிய செசீலியா பெய்ஜுக்கு வெளிப்படுத்தப்பட்ட
அர்ச். சூசையப்பரின் வாழ்க்கை வரலாறு என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.)

சூசையின் தாய் தன் குழந்தையைப் பிரமாணிக்கத்தோடு நன்கு உணவூட்டி வளர்த்து வந்தாள். அது அவளுக்கு ஒரு ஆறுதலாக இருந்தது. அவள் தன் குழந்தையைக் கருத்தோடு கவனித்து வந்தாள். அடிக்கடி சூசை துயரமாக இருப்பதையும், மௌனமாக அழுவதையும் அவள் கவனித்தாள். அவரில் இத்தகைய வழக்கத்துக்கு மாறான நடத்தையைக் கண்டு அவள் ஆச்சரியப்பட்டாள். ஆனாலும் விவேகமுள்ளவள் என்பதால், இதுபற்றி யாரிடமும் பேசாமல் மௌனமாக இருந்தாள். இதற்கெல்லாம் ஏதோ ஒரு இரகசிய தேவ வரப்பிரசாதம்தான் காரணமாக இருக்க முடியும் என்று அவளுக்குத் தோன்றியது. மாசற்றவராகிய தன் மகன் ஏற்கெனவே தவம் செய்யத் தொடங்கியிருந்தார் என்ற உணர்வு அவளுக்கு ஏற்பட்டிருந்தது. அந்த உணர்வு தவறான தாக இருக்கவுமில்லை, ஏனெனில், தேவ இஷ்டப்பிரசாதக் கொடையோடு ஏற்கெனவே புத்தியைப் பயன்படுத்தும் கொடையையும் சூசை பாலன் பெற்றிருந்தார். மற்றவர்களை விட அதிகமாக அவர் கடவுளைப் பற்றியும், அவருக்கு எதிராக மனுக்குலம் கட்டிக்கொள்ளும் பாவங்களைப் பற்றியும் அவர் அறிந்திருந்தார்.



இதன் காரணமாக, அவர் ஏராளமாகக் கண்ணீர் சிந்தினார். கடவுள் பரிதாபத்திற்குரிய பாவிகளின் மீது இரக்கம் கொண்டு, என்றும், அவர்களுக்கு ஞான வெளிச்சம் தந்து, தங்கள் பாவங்களின் கனாகனத்தைக் காண அவர்களுக்கு உதவ வேண்டும் என்றும் மன்றாடி, சூசை தம் கண்ணீர்களைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்து வந்தார். ஒரு வானதூதர் அவரிடம், சூசையின் கண்ணீர் மகா உன்னதருக்குப் பிரியமானது என்றும், இதன் மூலம் பாவிகளான அயலாரின் மீதான தம் நேசத்தை அவர் வெளிப்படுத்துகிறார் என்றும் கூறி, அவரை ஊக்கப்படுத்தி வந்தார். ஆகவே, சூசை கடவுளைப் பிரியப்படுத்தவும், தம் அயலானுக்கு உதவவும், இவ்வாறு பாவங் களின் நிமித்தம் தொடர்ந்து கண்ணீர் சிந்தி மன்றாடி வந்தார்.

ஆகவே, சூசை பிறந்தவுடனேயே, எல்லாவற்றிற்கும் மேலாக, தமது முழு வல்லமையோடும், முழு பலத்தோடும் சர்வேசுரனை நேசிப்பது, தம் அயலானை நேசிப்பது என்ற தேவ திருச் சட்டத்தின் இரு கட்டளைகளையும் ஏற்கெனவே நிறைவேற்றிக் கொண்டிருந்தார். அவருடைய மனச்சான்றில் கண்டனத்திற்குரிய எதுவும் இல்லாத நிலையில், அவருடைய தவச் செயல்கள் அடிப்படையில் மற்றவர்களின் பாவங்களுக்குப் பரிகாரம் செய்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. இதற்குக் கைம்மாறாக கடவுள் அவர் மீது இன்னும் அதிகமான அநேக உபகாரங்களையும், வரங்களையும் பொழிந்து வந்தார். இவற்றில் ஒரு மிக விசேஷமான உபகாரமாக, சூசை தேவ வார்த்தையானவரின் திருத்தாயாரின் பாதுகாவலராகவும், மகா பிரமாணிக்கமுள்ள மணவாளராகவும் ஆகும்படியாக, இந்த மிகப் பரிசுத்த அன்னையின் பிறப்பு, குறித்த காலத்திற்கு முன்பே நிகழ சூசை காரணமானார்.

இந்தப் புனித மிக்க குழந்தை எப்படி நாட்கணக்கில் கடவுளுக்குள் கிரகிக்கப் பட்டவராக இருப்பார் என்பது மற்றவர்களால் மிக வெளிப்படையாகவே காணப்பட்டது. இந்த சந்தர்ப்பங்களில் அவருக்கு தாயமுது தேவையாயிருக்கவில்லை; அவருடைய ஆத்துமத்தை வளப்படுத்திய மிக இன்பமுள்ள தெய்வீக ஆறுதலைப் பெற்றுக்கொள்வது ஒன்றே அவருக்குப் போதுமானதாக இருந்தது. இது எவ்வளவு அதிக அபரிமிதமாக இருந்தது என்பதை அவரது முகபாவனையைக் கொண்டே தீர்மானிக்க முடிந்தது. சூசை பாலனின் முகம் இத்தகைய சமயங்களில் முற்றிலுமாக சம்மனசுக்களுக்குரிய தோற்றத்தை எடுத்துக் கொண்டது; அது அவரைப் பார்த்தவர்களின் மனங்களில் உடனடியாக ஒரு வணக்கவுணர்வைத் தூண்டியெழுப் பியது. இச்சமயங்களில், அவருடைய கன்னங்கள் சிவந்து காணப்பட்டன. புன்சிரிப்புடன் கூடிய ஒரு பாவனை அவருடைய முகக் கூறுகளில் விளையாடியது. அவருடைய கண்கள் இரண்டு நட்சத்திரங்களைப் போல மின்னின.

அவருடைய தாய் இவ்வாறு அவரைக் கண்டபோதேல்லாம், அவரை எந்த விதத்திலும் தொந்தரவு செய்யாமல், அவரைத் தனியே இருக்க விட்டு விடுவாள். இத்தகைய பரலோகப் பரவச நிலையில் அவரைக் காண்பது, அவளையும் ஒரு தனிப்பட்ட ஞான ஆறுதலால் நிரப்பியது. அச்சமயத்தில் அவளுடைய இருதயத்திலிருந்து தேவ புகழ்ச்சிப் பாடல்களும், சர்வேசுரனுக்கு நன்றியறிதலும் வெடித்துப் புறப்பட்டன. மிக அடிக்கடி சூசை பாலனின் தந்தையும் தம் மகனில் இந்த அசாதாரண, பரிசுத்த நிலைகளைக் கவனித்து வந்தார். அவரும் அடிக்கடி தம் மனைவியோடு, இதைப் பற்றி ஆனந்தக் கண்ணீர் சிந்தி வந்தார்.

தொடரும்.

அர்ச். சூசையப்பரைக் குறித்து ஜெபம்

மகா பாக்கியம் பெற்ற அர்ச். சூசையப்பரே! எங்களுடைய துன்ப வேளையில் உமது பரிசுத்த பத்தினியின் உதவியை இரந்து மன்றாடின பின்பு, உமது பாதுகாவலையும் நம்பிக்கையோடு தேடி வருகிறோம். தேவதாயாரான ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்த அர்ச். கன்னிமரியாயிடத்தில் உமக்குள்ள சிநேகத்தின் பேராலும், திவ்ய குழந்தை சேசுநாதருக்கு நீர் காண்பித்த தந்தைக்குரிய அன்பைக் குறித்தும், உம்மிடத்தில் நாங்கள் கேட்கும் மன்றாட்டு ஏதென்றால் (விரும்பியதைக் கேட்கவும்.) சேசுக்கிறீஸ்துநாதர் தமது இரத்தத்தால் நமக்காக சம்பாதித்த சுதந்திரத்தை தேவரீர் கிருபையாய்ப் பார்க்கவும் எங்கள் இக்கட்டிலே உமது பலமுள்ள ஒத்தாசையால் துணையாயிருக்கவும் மன்றாடுகிறோம்.

ஓ! திவ்ய குடும்பத்தை உத்தம ஞானத்தோடு நடத்திவந்த கைத்தாதையே! சேசுக்கிறீஸ் நாதர் தம்முடையவர்களாகத் தெரிந்து கொண்ட ஜனங்களைப் பராமரித்தருளும். ஓ! மிகவும் அன்பு நிறைந்த எங்கள் தகப்பனே! நாங்கள் எவ்வித தப்பிதத்திலும் கேட்டிலும் விழாதபடி எங்களைக் காப்பாற்றும். ஓ! எங்களைப் பாதுகாத்தருளும்படி மேலான வல்லமையுள்ளவரே! நரக சத்துருக்களோடு நாங்கள் செய்யும் யுத்தத்திலே நீர் மோட்ச சிம்மாசனத்திலிருந்து கிருபையாய் எங்களைப் பார்த்து துணையாய் வருவீராக. திவ்ய பாலகன் முன்னாள் சாவின் ஆபத்துக்குத் தப்பித்துக் கொள்ளும்படி தேவரீர் எவ்விதம் ஏதுவாயிருந்தீரோ அவ்விதமே சர்வேசுரனுடைய திருச்சபையை பசாசின் வலையிலும், எவ்வித ஆபத்திலுமிருந்து பாதுகாத்தருளும். உமது பாதுகாவல் இடைவிடாமல் என்றும் இருக்கக்கடவது. உமது புண்ணிய மாதிரிகையாலும், உம்முடைய உதவியின் துணையாலும் நாங்கள் எல்லோரும் பரிசுத்தமாய்ச் சீவித்து பக்தியாய் மரித்துப் பரகதியின் முடிவில்லாப் பாக்கியம் பெற்று வாழும்படி கிருபை செய்ய உம்மை மன்றாடுகிறோம். – ஆமென்.

தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்திலிருக்கும் ஆத்துமத்திலிருந்து இந்த ஜெபம் கடவுளை நோக்கி எழும்போது, பலன் தராமல் போவதேயில்லை. ஒருவேளை நீங்கள் இதன் மூலம் கேட்கும் காரியம் தேவ சித்தமல்ல, என்றால், நீங்கள் கேட்பதைவிட மேலான பலனை இது நிச்சயம் பெற்றுத் தரும். ஆகவே, கடவுளின் மகிமைக்காகவும், அர்ச். சூசையப்பருக்குத் தோத்திரமாகவும், உங்கள் தேவைகளுக்காகவும் இதை தினமும் ஜெபித்து வாருங்கள். அப்போது இதன் வல்லமையுள்ள பாதுகாவலைப் பெற்றுக்கொள்வீர்கள்.



மாதாவின் சூசை அச்சக புத்தக டிப்போவில் கிடைக்கும் ஞானப் புத்தகங்கள்



Cell: 94876 09983 Landline: 0461 2361989

		விலை ரூ.	தபாலில் விலை ரூ.
1	பாரம்பரிய திருக்குடும்ப பக்திமாலை	220.00	
2	உலகின் இறுதிக் காலங்கள்	125.00	
3	திருப்பாடுகளின் வரலாறு	150.00	
4	அனுதின ஜெபப் புத்தகம்	50.00	
5	திருப்பாடுகளின் தியானம்	90.00	
6	அறிவோம் பத்துக் கட்டளைகள்	100.00	
7	மலைமேல் பிரசங்கம்	65.00	
8	அறிவோம் அப்போஸ்தலர்களை: அர்ச். பிலவேந்திரர்	90.00	
9	ஞான உபதேசக் கோர்வை (3 பாகங்கள் அடங்கியது)	325.00	
10	மன்ரேசா (அர்ச். இஞ்ஞாசியாரின் தியானப் பிரசங்கங்களின் தொகுப்பு	125.00	
11	கிறீஸ்துநாதர் அநுசாரம்	250.00	
12	மரியாயின் மீது உண்மை பக்தி	125.00	
13	பாத்திமா காட்சிகள்	100.00	
14	பாவசங்கீர்த்தனத்தின் இரகசியம்	60.00	
15	சேசுவின் திருநாமத்தின் அதிசயங்கள்	35.00	
16	கற்பு என் பொக்கிஷம்	60.00	
17	என்னைப்படி அல்லது வருத்தப்படு (உத்தரிக்கிற ஆன்மாக்கள் பற்றியது)	30.00	
18	ஞான உணர்த்துதல்	40.00	
19	Read Me or Rue It	60.00	
20	என்னைப் படிக்காவிட்டால் வருத்தப்படுவாய்	80.00	
21	கத்தோலிக்க வேத சத்தியங்கள்	45.00	
22	இதுதான் பாத்திமா செய்தி, இதுவே பரிகார பக்தி	35.00	
23	ஞான சரீரம்	35.00	
24	சலேத் இரகசியம்	35.00	
25	மரியாயின் இரகசியம்	30.00	
26	தேவ இரகசிய ரோஜா மாதா காட்சிகள்	30.00	
27	The Penny Catechism	35.00	
28	அமலோற்பவ மாமரியின் போரணி	40.00	
29	அன்னையை நேசிக்கப் பன்னிரு படிகள்	30.00	
30	மரியாயின் மாசற்ற இருதய பரிகார பக்தி முயற்சிகள்	35.00	
31	முத்துக்குளித் துறையின் முதல் ஆயர் (வந். ரோச் ஆண்டகையின் வரலாறு)	30.00	
32	மோட்சம், நரகம், உத்தரிக்கிற ஸ்தலம்	35.00	
33	வியாகுல மாதா பக்தி	35.00	
34	தலை வெள்ளி, முதல் சனி பக்தியும், ஜெபமாலையும் அனுசரிக்கும் முறை	20.00	
35	உத்தரிக்கிற ஸ்தலத்துக்கு அனுதின யாத்திரை	15.00	
36	காவல் சம்மனசானவர்	10.00	
37	சிலுவைப் பாதை	15.00	
38	பரிசுத்த ஆவி ஜெபம்	6.00	
39	சேசுவின் திரு இருதய மந்திரமாலை	6.00	
40	தேவமாதாவின் மந்திரமாலை	10.00	
41	அர்ச். சூசையப்பர் பக்தி மாலை	15.00	
42	அர்ச். சூசையப்பர் மகத்துவங்கள்	60.00	
43	ஆதித் திருச்சபையின் பத்து வேத கலாபனைகள்	10.00	
44	திருச்சபையின் கட்டளைகள் (சிறிய விளக்கத்துடன்)	10.00	
45	சேசுவின் இரக்க பக்தி	10.00	
46	அர்ச். பிலோமினம்மாள் ஜெபப் புத்தகம்	10.00	
47	தேவ அழைத்தல்கள்	35.00	
48	சின்னக் குறிப்பிடம்	10.00	

		விலை ரூ.	தபாலில் விலை ரூ.
49	அன்பிரவு (பரிகாரத் திருமணி ஜெபப் புத்தகம்	25.00	
50	மனச் செபம் ஒரு விளக்கம்	35.00	
51	புதுநன்மைப் புனிதை (முத்திப்பேறு பெற்ற இமெல்டா வரலாறு)	70.00	
52	பரலோக எச்சரிப்பு (2 புத்தகங்களின் தொகுப்பு -Fr. அந்தோனி சேவியர் தொகுத்து எழுதியது	60.00	
53	ஜெபமாலையின் இரகசியம் (அர்ச். லூயிஸ் மோன்போர்ட் எழுதியது)	100.00	
54	மரியாயின் மாசற்ற இருதய வெற்றியின் உதயம்	35.00	
55	33 நாள் தயாரிப்பு: மாதாவுக்கு முழு அர்ப்பணம் செய்யும் முறை (தியானங்களுடன்)	70.00	
56	இறுதிக் கால யுகம்	100.00	
57	அர்ச். பத்தாம் பத்திநாதர் வாழ்க்கை வரலாறு	100.00	
58	புதுமைப் புனிதர் தந்தை பியோ	200.00	
59	வேத விளக்கம் (வீரமாமுனிவர் (சங்.ஜோசப் பெஸ்கி, சே.ச.) எழுதியது	150.00	
60	அன்பின் அரசர்	150.00	
61	நரகம்	60.00	
62	அர்ச். ரீத்தம்மாளின் ஜீவிய சரித்திரம்	13.00	
63	அர்ச். சிலுவை அருளப்பர் வாழ்க்கை வரலாறு	80.00	
64	நரக சத்தியம்	70.00	
65	தேவமாதாவின் பிரார்த்தனை விளக்கம்	150.00	
66	மரியாயின் மகிமைகள்	170.00	
67	புதிய நட்சத்திரம் பிலோமினா	60.00	
68	அர்ச். பாஸி மரிய மதலேனாள்	85.00	
69	அர்ச். ஜெர்த்ரூத்தம்மாள்	45.00	
70	ஜெபமாலை ஜெபிப்பது எப்படி?	10.00	
71	A Brief History of St. Mary Magdalene de Pazzi, Carmelite and Mystic	50.00	
72	புனித தெரேசம்மாள் சரித்திரம்	160.00	
73	கடவுள் மனிதனின் காவியம் (முதல் பாகம்)	350.00	
74	கடவுள் மனிதனின் காவியம் (இரண்டாம் பாகம்)	350.00	
75	கடவுள் மனிதனின் காவியம் (மூன்றாம் பாகம்)	550.00	
76	கடவுள் மனிதனின் காவியம் (நான்காம் பாகம்)	200.00	
77	கடவுள் மனிதனின் காவியம் (ஐந்தாம் பாகம்)	350.00	
78	கடவுள் மனிதனின் காவியம் (ஆறாம் பாகம்)	350.00	
79	கடவுள் மனிதனின் காவியம் (ஏழாம் பாகம்)	550.00	
80	கடவுள் மனிதனின் காவியம் (எட்டாம் பாகம்)	550.00	
81	கடவுள் மனிதனின் காவியம் (ஒன்பதாம் பாகம்)	550.00	
82	கடவுள் மனிதனின் காவியம் (பத்தாம் பாகம்)	550.00	

அன்பான வாசகர்களின் கவனத்திற்கு

1. மாதா பரிகார மலர் ஆண்டு சந்தாவை இன்னும் புதுப்பிக்காதவர்கள் உடனே அதைப் புதுப்பித்து, நம் பத்திரிகை நல்ல முறையில் வெளிவர எங்களுக்கு உதவும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். வருட சந்தா ரூ. 150/- கூடுதல் தபால் செலவு ஆகிறது. நேயர்கள் உதவி செய்யும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.உங்கள் ஆன்ம சரீர நன்மைகளுக்காக தினமும் எங்கள் ஜெபங்களில் வேண்டிக்கொள்கிறோம்.

2. மாதா பரிகார மலர் சந்தா, காணிக்கை மற்றும் புத்தகங்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட பெயரில் நீங்கள் மணியார்டர்கள், D.Ds மற்றும் காசோலைகளை அனுப்புங்கள்.

A/c Name: SOCIETY OF APOSTLES OF MARY
No. 31423199505 - IFS Code: SBIN 0008145
State Bank of India, Kanthasamypuram Branch, Tuticorin.

அனுப்ப வேண்டிய முகவரி

மாதா அப்போஸ்தலர்கள் சபை, ரோஸா மிஸ்திக்கா,
11/519 சகாயமாதா பட்டணம், 2-வது தெரு, வி.வி.டி. பள்ளி எதிரில், தூத்துக்குடி - 628 002.
போன் : 0461 2361989, அலைபேசி: 94876 09983. Email: tutirosamystica@gmail.com
சந்தா நன்கொடை செலுத்த: Google Pay: 94876 09983.

நமது மாதா அப்போஸ்தலர்கள் சபைக்கு அனுப்பும் நன்கொடை மற்றும் காணிக்கைக்கு வரிச் சலுகை பெற்றுக்கொள்ள ரசீது (80G - AAJTS6976JF20215) பெற்றுக்கொள்ள முடியும்.

சேசு மரியாயில் அன்புள்ள நண்பர்களே, உபகாரிகளே,

நமது உலக ஜெயராக்கினி மாதா ஆலய கட்டட வேலைகள் கடந்த ஆறு ஆண்டுகளாக நடந்து வருகின்றன. சேசுவின் திரு இருதயத்திற்கும் (திவ்ய நற்கருணைக்கும்), மேலும், தேவ மாதா பாத்திமாவில் கேட்டுக்கொண்டபடி மரியாயின் மாசற்ற இருதய பரிகார பக்திக்கென்றும் இந்த ஆலயத்தை மிகுந்த முயற்சியுடன், உபகாரிகளின் உதவியினால் கட்டி வருகிறோம். தேவையான உதவிகள் கிடைக்காமையால் இக்கட்டட வேலைகள் இன்னும் முடியவில்லை. நமது உலக ஜெயராக்கினி மாதா ஆலயத்தை முழுமையாகக் கட்டி முடிக்க கீழ்க்கண்ட வகைகள் தேவைப்படுகின்றன:

01.	ரூஃப் (Roof) & கான்கிரீட் & சென்டரிங் கூலி	ரூ. 30,00,000.00
02.	பீடத்தின் மேல் (Center) டவர் கான்கிரீட் & சென்டரிங் கூலி	ரூ. 9,00,000.00
03	ஆலயத்தின் உள்பக்கம் & வெளிப்பக்கம் பூசுவதற்கு பொருட்கள் (Finishing materials) & கூலி	ரூ. 10,00,000.00
04.	ரூஃப் மேல் பக்கம் & உள்பக்கம் பூசுவதற்குப் பொருட்கள் (Finishing materials) & லேபர் கூலி	ரூ. 12,50,000.00
05.	கூரை ஓடு பதிக்கப் பொருட்கள் & லேபர் கூலி	ரூ. 7,00,000.00
06.	ஆலயத்தின் முன் கோபுரம் (Front Tower) கட்டுவதற்கு பொருட்கள் (Finishing materials) & லேபர் கூலி	ரூ. 7,50,000.00
07.	குருக்கள் தங்கும் இல்லத்திற்கு உள்பக்கம், வெளிப்பக்கம் பூசுவதற்கு பொருட்கள் (Finishing materials) & லேபர் கூலி	ரூ. 1, 05,000.00
08.	தேக்கு மரம் நிலை & கதவு 9, ஜன்னல் 14, லேபர் & வுட் பாலிஷ்	ரூ. 17,50,000.00
09.	தரைக்கு வெள்ளை மார்பிள் கல் & லேபர் கூலி	ரூ. 24,00,000.00
10.	எலெக்ட்ரிக்கல் சாமான்கள், (Fittings)விளக்குகள் & லேபர் கூலி	ரூ. 6,00,000.00
11.	ஆலயம் முழுவதற்கும் வர்ணம் பூச பொருட்கள் & லேபர் கூலி	ரூ. 12,00,000.00
12.	கண்ணாடி ஓவியங்கள் வேலை	ரூ. 9,00,000.00
13.	திவ்ய பலிபூசை நிறைவேற்ற முக்கிய பீடம் (தேக்கு மர வேலை)	ரூ. 9,25,000.00
14.	பீடத்தின் இரு புறமும் (Altar Sides) தேக்கு மர வேலை	ரூ. 7,00,000.00
	ஆலயம் கட்டி முடிக்கத் தேவையான மொத்தத் தொகை	ரூ.1,61,80,000.00

இந்த ஆலயத்தைக் கட்டி முடிக்க மாதாவின் அன்புப் பிள்ளைகள் தங்களால் முடிந்த உதவி அளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வங்கி விபரம்:

A/c Name : Society of Apostles of Mary
A/c No. : 1218000000473
IFS Code : IOBA0001218
Indian Overseas Bank,
Mappillaiyurani Branch,
Thoothukudi.
For Tax exemption: 80G - AAJTS6976JF20215

இவண்,
மாதா அப்போஸ்தலர்கள் சபை மற்றும்
மாதா அப்போஸ்தலர்கள்
முகவரி:
மாதா அப்போஸ்தலர்கள் சபை,
11 / 519, சகாயமாதா பட்டணம், 2-வது தெரு,
தூத்துக்குடி - 628 002. போன்: 0461 2361989
அலைபேசி: 94876 09983 / 94872 57479
Email: tutirosamystica@gmail.com

உலக ஜெயராக்கினி மாதா ஆலயம்



ஆலயத்தின் முழுத்தோற்றம்



கட்டிடப் பணி நடைபெறும் ஆலயத்தின் தோற்றம்

முகவரி

மாதா அப்போஸ்தலர்கள் சபை,
(Society of Apostles of Mary)
11/519, சகாயமாதாபட்டணம்,
2வது தெரு, தூத்துக்குடி – 628 002.
தொலைபேசி: 0461 2361989
அலைபேசி: 94876 09983, 94872 57479
E-mail: tutirosamystica@gmail.com

வங்கி விபரம்

Account Name:
Society of Apostles of Mary
Account No. 121802000000473
IFS Code: IOBA0001218
Indian Overseas Bank,
Mappillaiyurani Branch,
Thoothukudi.

Google Pay: 94876 09983 Avail 80G for Tax Exemption - AAJTS6976JF20215



ஜூலை & ஆகஸ்ட் மாதங்களின் முதல் சனி பக்தி முயற்சியின் பரிகாரக் கருத்துக்கள்

ஜூலை : தேவமாதா ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்தார்கள் என்ற சத்தியத்தை மறுக்கும் நிந்தைகளுக்குப் பரிகாரமாக;

ஆகஸ்ட்: தேவமாதா சர்வேசுரனுடைய தாய் என்ற சத்தியத்தை மறுக்கும் நிந்தைகளுக்குப் பரிகாரமாக;

மாதா பரிகார மலரில் விசுவாசத்திற்கோ, நல்லொழுக்கத்திற்கோ, கத்தோலிக்க திருச்சபைக்கோ அதன் போதனைகளுக்கோ உண்மையான பக்திக்கோ மாறுபாடான எந்தக் கருத்தும் வெளிவராது.

– மாதா பரிகார மலர் குழு

MATHA PARIKARA MALAR
ROSA MYSTICA
(Opp. V.V.D. H. Sec. School)
SAHAYAMATHAPATTANAM
TUTICORIN - 628 002.
PH: 0461 - 2361989
Cell: 94876 09983
E-mail: tutirosamystica@gmail.com

மாதா பரிகார மலர்
ரோஸா மிஸ்திக்கா
வி.வி.டி. மேல்நிலைப்பள்ளி எதிரில்,
சகாயமாதாபட்டணம்
தூத்துக்குடி மேலூர் போஸ்ட் – 628 002
போன்: 0461 – 2361989
அலைபேசி: 94876 09983

To

Printed, Published and owned by: S. Michael Joseph Kennedy , Managing Trustee cum Secretary of Society of Apostles of Mary & Keeper of Mathavin Susai Achagam (Printing Press), 11/519, 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin District, Tamil Nadu.

Printed at: Mathavin Susai Achagam (Printing Press), C/o, Society of Apostles of Mary, D.No 11/510, 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin - 628 002. Tuticorin Dist., Tamil Nadu.

Published at: Society of Apostles of Mary, 11/510-1, Rosamystica 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin - 628 002. Tuticorin Dist., Tamil Nadu.

Editor: Sammanasu Navis, C/o, Society of Apostles of Mary, 11/519, 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin - 628 002. Tuticorin Dist., Tamilnadu.